ங்கு நூல்கள்—12 விலை 2 அணா

# கீதா போதனை

S T Kannappa
Date 25-7-34
AGANERI RAMNADDT.



சுதந்திரச் சங்கு காரியா

திருவல்லிக்கேணி, சென்னை

# கீதா போதனை

மகாத்மா காந்தி அருளியது

எரவாடா சிறையிலிருந்து ஸபர்மதி ஆசிரமத்துக்கு
அடிகளால் எழுதியனுப்பப்பட்ட கடிதங்கள்

Date 25-7-34
PAGANERI RAMNAD DT.

தமிழ்மொழி பெயர்ப்பாளர் :
B. S. சுந்தரம்
கதர்த் தொண்டர், திருப்பூர்.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

சுதந்திரச் சங்கு காரியாலயம்
திருவல்லிக்கேணி, சென்னை.
1933

# பிரேமார்ப்பணம்

தாய் நாட்டின் விடுதலைக்காக சத்யாக்கிரஹத்தில் ஈடுபட்டு என்னுடன் அடிபட்டு, அன்னை பாரதத் தேவியின் பணியில் தன்னையே உயிர்ப் பலியிட்டுக் கொண்டு 12-1-1932ல்

வீர ஸ்வர்க்க மடைந்த மகா த்யாகி

## ஸ்ரீயுத குமாரசாமிக்கு

எனது நட்பின் அறிகுறியாக இச்சிறு மொழி பெயர்ப்பை மிக்க தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்.

திருப்பூர்,
1—4—1933.

B. S. சுந்தரம்,
காதி வஸ்திராலயம், திருப்பூர்.

3495

# வேண்டுகோள்

எரவாடா சிறையிலிருந்து மகாத்மாஜி தமது ஆசிரம வாசிகளுக்கு வாரந்தோறும் ஒரு கடிதம் எழுதி வந்தார். அவற்றின் முதல் 15 கடிதங்களின் தொகுதி "எரவாடா மந்திரத்திலிருந்து" என்ற பெயருடன் வெளியிடப்பட்டது. அதன் பிறகு காந்தியடிகள் வாரந்தோறும் பகவத் கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் பேரிலும் தமது சொந்த அபிப் பிராயத்தை எழுதி யனுப்பத் தொடங்கினர். 13 அத்யாயங்கள் வரை எழுதியபின் காந்திஜி விடுதலை யடைந்து விட்டார். அதன் பிறகு இன்று வரை அவரால் பாக்கி யுள்ள 5 அத்யா யங்களைப் பற்றி எழுதக் கூடவில்லை.

இவ் வியாசங்கள் அனைத்தும் மகாத்மாஜியால் முதலில் குஜராத்தி பாஷையில் எழுதப்பட்டன. அவற்றின் மொழி பெயர்ப்பே இச் சிறு நூல்.

கீதையின் உபதேசங்களை எவ்வளவு சிறு சிறு வாக்கியங் களில், மிகவும் எளிய நடையில் அவர் எழுதியிருக்கிருரோ, அதுபோல் இதுவரை எவராலும் எழுதப்படவில்லை என்ப தைத் தவிர, இப்புத்தகத்தைப் பற்றி வேறு யாது கூறக்கூடும்? கீதையைப் பற்றிப் பல பாஷைகளில் சுமார் 1913 கிரந்தங் கள் இதுவரை உலகில் தோன்றியுள அந்த மாலையில் இந்த 'கீதா போதனை' என்ற சிறு நூலும் ஓர் ஒளி மணியாகத் திகழுமென்பதில் ஐயமின்று.

இச் சிறு நூலில் ஒவ்வொரு பக்கத்திலும்-என் ஒவ் வொரு வரியிலும் எத்தகைய ஞானம் ததும்புகின்றது! தமிழகத்தோர் இதைத் திருப்பித் திருப்பிப் படித்து, மனப் பாடம் செய்து, இக் கீதா போதனைகளைத் தமது வாழ்க்கை யில் பிரயோகிப்பார்களாக. இஃதொன்றே நான் வேண்டிக் கொள்ளுவது.

திருப்பூர்,
1—4—1933.

B. S. சுந்தரம்,
காதி வஸ்திராலயம், திருப்பூர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | .... | 1 |
| விஷாத யோகம் | .... | 3 |
| ஸாங்க்ய யோகம் | .... | 7 |
| கர்ம யோகம் | .... | 13 |
| ஞான-கர்ம யோகம் | .... | 21 |
| ஸந்யாச யோகம் | .... | 24 |
| ஆத்மஸம்யம யோகம் | .... | 29 |
| ஞான விக்ஞான யோகம் | .... | 33 |
| அக்ஷரபல யோகம் | .... | 36 |
| ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் | .... | 40 |
| விபூதி யோகம் | .... | 45 |
| விசுவரூப தர்சன யோகம் | .... | 47 |
| பக்தி யோகம் | .... | 51 |
| க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம் | .... | 54 |

# கீதா போதனை

## முகவுரை

ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்படும் விரதங்களைப் பற்றியும், யக்ஞங்களைப் பற்றியும், யக்ஞங்களின் அவசியத்தைப் பற்றியும் நாம் யோசித்து, முடிவு செய்தாகி விட்டது. இனி எந்த ஒரு மகத்தான கிரந்தத்தை நாம் தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாகப் பாராயணம் செய்து வருகிறோமோ, மனனம் செய்து வருகிறோமோ, எதை நாம் நமது ஆத்மாவை அறிவதற்கான தீபஸ்தம்பமாகவும், துருவ நக்ஷத்திரமாகவும் கருதுகிறோமோ, அந்த பகவத் கீதையை நான் எவ்விதம் அறிந்திருக்கிறேன் என்று ஆராய விரும்புகிறேன். இந்த ஆராய்ச்சியில் என்னை ஈடுபடும்படி செய்தது ஒரு நண்பரின் கடிதமே யாகும். அவர் என்னால் எழுதப்பட்ட "அனாஸக்தி யோக"த்தைப் படித்தாராம். ஆனால் அதன் பொருள் அவருக்குத் தெளிவாக விளங்கவில்லையாம். ஆம், "அனாஸக்தி யோகம்" மிக எளிய நடையில் எழுதப்பட்டிருப்பினும், அஃது மூல கிரந்தங்களின் பொழிப்புரையே யாதலால் அதை அறிந்து கொள்ளுவதில் கஷ்டம் ஏற்படுவது சகஜமே. விஷயமே கடினமாக இருக்கையில் எளிய நடையால் மட்டும் என்ன பிரயோஜனம்? ஆகவே விஷயத்தையே சுலபமான-எளிய நடையில் எழுத முற்படுகின்றேன். எந்த

விஷயத்தை நாம் சதா நமது வாழ்க்கையில் நடத்திக் காட்ட விரும்புகிறோமோ, எதன் உதவியால் நாம் நமது வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் விடுவிக்கப் பிரயத்தனப் படுகிறோமோ, அத்தகைய நூல் எத்தனை விதமாக, எவ்விதமாக மனதில் தோன்றுகின்றதோ, அதே விதமாக நாம் அதை அறிந்து, அடிக்கடி மனனம் செய்வோமாகில், முடிவில் நாம் தன்மயமாகி விடுகிறோம். நானோ, எனக்குக் கஷ்டங்கள் நேரும் பொழுதெல்லாம் கீதா மாதாவிடமே ஓடுகிறேன்; இன்று வரை அதன் மூலமாகத் தேறுதலும் அடைந்திருக்கிறேன். ஆகையால் என்னைப் போல கீதையால் தேறுதல் அடைய விரும்புவோருக்கு நான் எந்த ரீதியில் கீதையை அறிந்துள்ளேன் என்று தெரிந்து கொள்ளுவது அதிக உதவியாக இருக்கலாம். ஒருக்கால் அவர்களுக்கு எனக்குத் தோன்றியதைக் காட்டிலும் அதிகமான—புதிய விஷயங்களும் தோன்றலா மல்லவா?

# விஷாத யோகம்

கீதை மகாபாரதத்தின் ஒரு சிறு பகுதி. மகாபாரதம் ஓர் இதிஹாச (சரித்திர சம்பந்தமான) நூலாகக் கருதப்படு கிறது. ஆனால் நான் மகா பாரதத்தையும் ராமாயணத்தை யும் இதிஹாச நூல்களாக மட்டும் கருதவில்லை. அவற்றை அற நூல்களாகவும் மதித்திருக்கிறேன். இதிஹாசங்களாகவே கூறவேண்டுமாயின் அவற்றை ஆத்ம-இதிஹாசங்கள் என்றே கூறல் வேண்டும். தவிர, அவை ஆயிரக்கணக்கான வருஷங் களுக்கு முன் நடந்த சம்பவங்களின் வர்ணனை மட்டுமல்ல. ஆனால் இன்று பிரத்யேக மானுட தேகத்திலும் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளின் வர்ணனையுமாம். மகா பாரதம், ராமாய ணம் இவ்விரண்டிலும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும், ராம ருக்கும் ராவணனுக்கு மிடையே நடந்த யுத்தங்களின் வர்ண னைகளே நிரம்பி யிருக்கின்றன. பாரத யுத்தத்தினிடையே நடந்த கிருஷ்ணார்ஜுன சம்வாதமே கீதை எனப்படுவது. இந்தச் சம்பாஷணைகளை சஞ்சயன் குருட்டுத் திருதராஷ்ட்ர னுக்கு வர்ணிக்கிறான்.

கீதை என்பதற்குப் பாடப்பட்டது என்று பொருள். பகவத் கீதையில் உபநிஷத்துகளின் சாரம் விளக்கப்பட் டிருக்கிறது. ஆகவே கீதை என்பதற்கு 'பாடப்பட்ட உப நிஷத்' என்று அர்த்தம். உபநிஷத் என்றால் ஞானபோதனை என்று அர்த்தம். ஆகவே கீதை என்பதற்கு ஸ்ரீ கிருஷ் ணன் அர்ஜுனனுக்களித்த ஞானோபதேசம் என்று பொருள் ஏற்படுகிறது. சகல ஜீவன்களிலும் வசிக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் நமது தேகத்திலும் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிதல் வேண்டும். அர்ஜுனனைப் போல் விஷயங் களை அறிய ஆவல்கொண்டு, தர்ம சங்கடம் நேரும்போது, நாம் எங்கும் நிறைந்த-நமது உள்ளத்திலேயும் வீற்றிருக்கும் பகவானைக் கேள்வி கேட்போமானால், அவரையே சரணமாக அடைவோமானால், அப்பொழுது அவர் நமக்கருள் புரியத் தயாராகவே யிருப்பதைக் காண்போம். நாம் தூங்கிக்கொண் டிருக்கிறோம். அந்தர்யாமியோ [உள்ளே இருப்பவர்] சதா

விழித்துக் கொண்டிருக்கிறார். விஷயங்களை அறிய நமக்கு ஆவல் பிறக்கவேண்டுமென்றுதான் அவர் எதிர்பார்த்திருக்கிறார். ஆனால் நமக்கு அவரை அணுகிக் கேள்விகள் கேட்கத் தெரிவதில்லை. கேள்விகள் கேட்க மனமும் வருவதில்லை. ஆகையினால் கீதை போன்ற தர்ம நூல்களைத் தினமும் படித்து, த்யானம் செய்து, நம்முள்ளத்தில் ஒரு விதமான தர்ம உணர்ச்சியைப் பிறப்பித்துக் கொள்ள விரும்புகிறோம். கேள்வி கேட்டு விஷயத்தை அறியவும் பழகுகிறோம். அதன் பின் துன்பம் வரும்போதெல்லாம் நாம் கீதையினிடம் ஓடுகிறோம். தேறுதலும் அடைகிறோம். யார் கீதையை இத்தகைய நோக்கத்துடன் படிக்கிறார்களோ அவர் நமக்கு சற்குருவாகிறார். தாய்க்குச் சமானமாகிறார். அத்தகையோரை அடைந்தோனும் க்ஷேம மடைகிறான். கீதையின் மூலம் நாம் நமது வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் போக்கிவிட முடியும். ஆகவே மேலே கூறியபடி தர்ம உணர்ச்சியைப் பெறுவதற்காக விதிப்படி யார் கீதையை உருப்போடுகிறார்களோ, அவர்களுக்கு தினந்தோறும் புதிய புதிய ஆனந்தம் உண்டாகும்; புதிய புதிய பொருள்கள் விளங்கிக் கொண்டிருக்கும். கீதையின் மூலமாக விளக்கப்படாத அற விஷயங்கள் ஒன்று கூட இல்லை. நமக்கு சிரத்தையின்மையால் படிப்பதற்கும், விஷயங்களை அறிந்து கொள்ளுவதற்கும், ருசி யற்றிருக்கலாம். ஆனால் அது வேறு விஷயம். சத் விஷயங்களில் நமக்கு தினந்தோறும் சிரத்தை ஏற்படுவதற்காகவும், நாம் எச்சரிக்கையாக இருப்பதற்காகவுமே கீதையை உருப்போடுகிறோம். இவ்விதம் கீதையை மனனம் செய்து வந்ததில், அதிலிருந்து நான் அறிந்து கொண்ட பொருளின் சாராம்சத்தை ஆச்ரம வாசிகளுக்கென்று இகனடியில் வரைகிறேன்.

பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தமது சேனைகளுடன் யுத்தகளத்தை யடைந்து அணிவகுத்து நின்றனர். கௌரவர்களின் ராஜாவான துர்யோதனன் துரோணாச்சாரியாரிடம் இரு சேனைகளிலுமுள்ள முக்ய வீரர்களைப்பற்றி வர்ணிக்கிறான் யுத்த முஸ்தீபுகள் முடிந்ததும் இருபக்கத்துச் சங்

கங்களும் தொனித்தன. பார்த்த சாரதியான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுடைய ரதத்தை அவ்விரு சேனைகளுக்குமிடையே செலுத்தினார். எதிரிகளின் சேனையில் நின்று கொண்டிருந்த வீரர்களைக் கண்ணுற்ற விஜயன் திகிலடைந்து, பகவானிடம் கூறுகிறான் :—“ஹே வாசுதேவா! நான் இவர்களுடன் எவ்வாறு யுத்தம் செய்வேன்? வேறு பகைவர்களுடன் போர் புரிவதாயிருந்தால், நான் எப்போதோ சமர் தொடங்கி யிருப்பேன். ஆனால் இவர்களோ சொந்த ஜனங்கள்! என் உறவினர்கள்!! கடைசியில் கௌரவர்கள் யார்? பாண்டவர்கள் யார்? பெரியப்பன், சிற்றப்பன் மக்களன்றோ? நாங்கள் அனைவரும் ஒன்றாக வளர்ந்து ஆளாகி யிருக்கிறோம். துரோணர் அவர்களுக்கு மட்டுந்தானா குருவாக இருந்தார்? எங்களுக்கும் சகல வித்தைகளையும் கற்றுக் கொடுத்த குருவன்றோ? அதோ பீஷ்மர் நிற்கிறார். அவர் எங்கள் பிதாமகனன்றோ? அவருடன் எவ்வாறு சண்டை போடுவேன்? கௌரவர்கள் மகா கொடியவர்கள் என்பது வாஸ்தவமே. அவர்கள் கணக்கற்ற துஷ்ட கர்மங்களைச் செய்திருக்கிறார்கள். அநியாயமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பாண்டவர்களாகிய எங்கள் ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டதன்றி, மகா ஸதியான துரோபதையையும் அவமானப்படுத்தி யிருக்கிறார்கள். இவை யாவும் அவர்கள் எங்களுக்கிழைத்த குற்றங்களே! எனினும், அவர்களைக் கொன்றுவிட்டு, நான் போவதெங்கே? எனக்கும் சிறிது பகுத்தறிவு இருக்கிறது; விவேகமிருக்கிறது. உறவினருடன் சண்டை யிடுவது பாவம் என்று நான் கருதுகிறேன். பாண்டவர்களாகிய எங்களை வஞ்சித்து, எங்களுடைய பாகமாகிய ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டவர்களாகவே இருக்கட்டும், அதனால் பாதகமில்லை. எங்களை எல்லாம் கொன்றுவிடக் கருதினாலும் கொல்லட்டும். ஆனால் அதற்காக நாங்கள் அவர்கள் மேல் கை வைக்கமாட்டோம். ஹே கிருஷ்ணா! நான் இந்த பந்துக்களுடன் சண்டை போடவே மாட்டேன்” என்று கூறி, அர்ஜுனன் மூர்ச்சை யுற்றுத் தன் ரதத்திலிருந்து கீழே விழுந்து விட்டான்.

இவ்விதம் இந்த அத்தியாயம் முடிவுபெறுகிறது. இந்த அத்தியாயத்திற்கு "அர்ஜுனன் துயர் யோகம்" என்று பெயர். அர்ஜுனனுக்கு எத்தகைய துக்கம் ஏற்பட்டதோ அத்தகைய துக்கம் நம்மனைவருக்கும் ஏற்படவேண்டும். தர்ம வேதனையும், விஷயத்தையறிய ஆவலுமின்றி ஞானம் கிடைப்பதரிது. நல்லதேது, கெட்டதேது என்றறிய இச்சை கூட அடையாதவனுக்குத் தர்ம விஷயத்தைப்பற்றிய பேச்செதற்கு? குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தம் கேவலம் நிமித்த மாத்திரமானதே. அதாவது உண்மைக் குருக்ஷேத்திரம் நமது சரீரமே. அது (சரீரம்) குருக்ஷேத்திர மட்டுமல்ல, தர்ம க்ஷேத்திரமுமாகும். இந்த சரீரத்தை ஈஸ்வரனுடைய வாசஸ்தானமென்று கருதி, அவ்வாறே செய்வோமானால் அஃது தர்ம க்ஷேத்திரமாகிறது. அந்த க்ஷேத்ரத்தில் தினந்தோறும் நம் கண் முன்னலேயே ஏதேனுமோர் சண்டை நடந்து கொண்டேதானிருக்கிறது. அத்தகைய சண்டைகளுக்குப் பெரும்பாலும் காரணமாக விருப்பது "இது எனது, அது உனது" என்ற மனப்பான்மையேயாம். இக்காரணம் பற்றியே பகவான் அர்ஜுனனுக்குப் போதிக்கிறார் :—"அதர்மத்திற்கு மூலகாரணம் ராகத்வேஷங்களே" (விருப்பும் வெறுப்பும்). "எனது" என்ற மாத்திரத்தில் ராகம் (விருப்பு) உதிக்கிறது. "உனது" என்றளவில் த்வேஷமேற்படுகிறது; பகை ஏற்படுகிறது. ஆனது பற்றியே "எனது, உனது" என்ற பேதத்தை மறப்பது நல்லது. கீதைமட்டுமின்றி சகல தர்ம நூல்களும் இதே விஷயத்தைப்பற்றித் தூண்டித் தூண்டிக் கூறி, எச்சரிக்கை செய்கின்றன. இவ்விஷயத்தைப்பற்றிப் பேசுவது ஒன்று, அதன்படி நடப்பது வேறு. ஆனல் கீதை இந்தப் போதனையை வாழ்க்கையில் நடத்திக் காட்டவேண்டுமென்று போதிக்கிறது. அஃதெவ்வாறு என்று விளக்க முற்படுவோம்.

எரவாடா மந்திரம்.
11—11—1930

பாபுவின் ஆசீர்வாதம்.

# ஸாங்க்ய யோகம்

திங்கள், காலை.

அர்ஜுனன் சற்று குணமடைந்தவுடன், பகவான் அவனைச் சற்றுக் கடிந்து பின்வருமாறு கூறினார்:—"பார்த்த! உனக்கிவ்வளவு மோகம் எங்கிருந்து வந்தது? உன்னைப் போன்ற வீர புருஷர்களுக்கு இது பெருமை யளிக்காது" ஆனால் இம் மொழிகள் அர்ஜுனனுடைய மோகத்தைத் துறத்த வல்லனவா? அவன் யுத்தம் செய்ய மறுத்து மேலும் கூறுவான் :—"இந்த பந்து ஜனங்களை — சம்பந்திகளைக் கொன்று, அதனால் ராஜ்ய பதவி மட்டுமல்ல, சுவர்க்க சுகமே கிடைப்பதாயினும் சரியே, அது எனக்குத் தேவையில்லை. நான் பெருத்த மனக் குழப்பத்தி லாழ்ந்துள்ளேன். இது சமயம் என் தர்மம் (கடமை) எதுவென்று எனக்குத் தோன்ற வில்லை. உன்னைச் சரணமடைகிறேன். எனக்கு என் தர்மத்தை விளக்குவாயாக."

இவ்விதம் அர்ஜுனன் துக்கப்படுவதையும். அவன் உள்ளத்தில் விஷயத்தை அறிய ஆவல் உண்டாயிருப்பதையும் கண்ட பகவானுக்கு இரக்கமுண்டாயிற்று. அவர் கூறுகிறார் : "நீ காரணமின்றி துக்கிக்கிறாய். சரியாக அறிந்து கொள்ளாமல் ஞானமொழி பேசுகிறாய். தேகத்திற்கும் அதனுள் உறையும் ஆத்மாவுக்கு முள்ள பேதத்தை மறந்து நீ பேசுவதாகத் தெரிகிறது. தேகம் மரிக்கிறது, ஆத்மா மரிப்பதில்லை. தேகமோ பிறவியிலிருந்தே அழியக்கூடிய தன்மை வாய்ந்தது: தேகத்தில் இளமையும் முதுமையும் தோன்றுவதே போல அழிவும் காலக்ரமத்தில் ஏற்படுகிறது. தேகத்தின் அழிவு ஏற்பட்ட பின்பும் தேஹி (ஆத்மா)வின் அழிவு ஒருபொழுதும் ஏற்படுகிறதில்லை. மேலும் தேகம் ஜனிக்கிறது. ஆத்மாவுக்கு ஜனனமும் கிடையாது. அதற்குத் தேய்வுமில்லை, விருத்தியுமில்லை. அது என்றும் உள்ளது. இன்று இருக்கிறது. இனியும் இருக்கும். ஆகவே நீ எதன்பொருட்டுச் சோகமடைகிறாய்? உனது துயரம் உனக்கு ஏற்பட்ட

மோகத்திலிருந்தே விளைந்திருக்கிறது. இந்தக் கௌரவர்களை நீ உன்னைச் சேர்ந்தவரெனக் கருதுகிறாய். அவ்வாறு கருதும் பொழுதே உன் மனத்தில் மமதை தோன்றுகிறது. ஆனால் நீ எந்த தேகங்களுக்காக இவ்வளவு மமதையடைகிறாயோ, அவை அழிந்தே தீரவல்லன என்பதை ஞாபகப்படுத்திக் கொள். அவற்றில் (தேகங்களில்) வசிக்கும் ஆத்மாவைப் பற்றியோ வென்றால், அவற்றை அழிக்கும் சாமர்த்தியம் யாருக்கும் கிடையாதென்றுணர்! அதை நெருப்பும் எரிக்காது, நீரும் நனைக்காது, காற்றும் அதை உலர்த்தாது. ஆம், நீ உனது கடமையைச் சிந்தித்துப்பார். நீயோ ஒரு க்ஷத்திரியன். உன் பின்னே இந்தப் பெரிய சேனைக்கூட்டம் நிற்கிறது. இப்பொழுது நீ பேடியைப்போல நடந்து கொள்வாயானால், நீ எண்ணிக் கொண்டிருப்பதற்கு நேர் விரோதமான பலனே ஏற்படும். மேலும் உன்னைக்கண்டு உலகம் நகைக்கும். இதுவரை நீ, மகா வீரர்களில் ஒருவனாகக் கருதப் பட்டுள்ளாய். இப்பொழுது இவ்வளவு தூரம் யுத்த முஸ்தீபுகள் நடந்தேறிய பின் நீ யுத்தம் செய்யப் பின்வாங்குவாயானால், நீ பயந்து ஓடிப்போனாய் என்றே உலகம் மதிக்கும். யுத்தகளத்திலிருந்து பின்னடைந்து ஓடுவது உன் கடமையாக விருப்பின், அவ்வாறு செய்வதனாலேற்படும் உலக நிந்தையைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் இங்கு நீ ஓடுவது அதர்மமாகிறது. இவ்விதம் இரண்டு விதத்திலும் தோஷமேற்படுவதைக் கவனி.

"இதுவரை நான் உனக்குப் புத்தியைப் பற்றியே கூறினேன். ஆத்மாவுக்கும் தேகத்திற்குமுள்ள பேதத்தை விளக்கினேன். உன் குலதர்மத்தைப் பற்றியும் எடுத்துரைத்தேன். இனி நான் உனக்குக் கர்மயோகத்தின் பெருமையை உணர்த்துகிறேன் கேள். இந்தக் கர்மயோகத்தை அப்பியாசம் செய்வோன்—இதை விதிப்படி வாழ்க்கையில் நடத்திக் காட்டுவோன், ஒருக்காலும் நஷ்டமடைவதேயில்லை. இது தர்க்கிக்கத் தகுந்த விஷயமல்ல. இஃது அனுஷ்டிக்கப்பட்டு, அனுபவம் அடையத்தக்க விஷயமாகும். ஆயிரம் மணங்கு எடையுள்ள தர்க்கத்தைக் காட்டிலும் ஒரு குண்டுமணி எடை

யுள்ள ஒழுக்கமே மேம்பட்டதென்பது உலகறிந்த விஷயம். இந்த ஒழுக்கத்தின் நன்மை தீமைகளைப் பற்றி விவாதிக்கத் தொடங்குவதும் கெடுதலாகவே முடியும். பரிணாமத்தைப் பற்றி எண்ணும்பொழுதே நமது புத்தி மழுங்கி விடுகிறது. புத்தகப் பண்டிதர்கள் கர்ம காண்டத்தில் ஈடுபட்டு, அநேக விதமான பலன்களை அடையவேண்டுமென்ற இச்சை யுடையவர்களாகிப் பல கிரியைகளைத் தொடங்கி விடுகின்றனர். ஒரு கிரியையில் பலன் கிட்டவில்லை யென்று தெரிந்த மாத்திரத்தில் வேறு ஒரு கிரியையைச் செய்ய முற்படுகின்றனர். இதன் நடுவில் யாராவது மூன்றாவது முறை யொன்றைக் கூறுவார்களானால், அதையும் செய்ய முற்படுகின்றனர். இவ்விதம் செய்வதனால் அவர்களது புத்தி நிலை யற்றுப் போகிறது. ஆனது பற்றியே மனிதன் கர்மத்தின் பலனைக் கருதாமல் தன் கடமையை—கர்மத்தை மட்டும் செய்துகொண்டு போக வேண்டும். ஆகையால் பார்த்தா! இது சமயம் சமர் புரிதலே உன் கடமை யாகிறது; இதை முடிவுறச் செய்வது என் தர்மமாகிறது. லாபமும் நஷ்டமும், வெற்றியும் தோல்வியும் உன் கையிலில்லை. நீயேன் வண்டியின் இருசைப்போல (அச்சு) இதன் பாரத்தை உன் தலையில் ஏற்றிக் கொள்ளுகிறாய்? வெற்றியும் தோல்வியும், குளிரும் வெப்பமும், சுகமும் துக்கமும் மனிதன் பின்னே தொடர்ந்தே நிற்பன. மனிதன் அவற்றைச் சகித்தே தீரவேண்டும். பலன் எத்தகைய தாயினும், அதைப்பற்றிய சிந்தனையற்று, சமத்துவ பாவத்துடன் தன் கடமையைச் செய்துகொண்டு, அதிலேயே தன்னை மறந்திருக்கவேண்டும். இதைத்தான் யோகமென்பர். இதில் தான் கர்மத்தின் பெருமை யிருக்கிறது. அதாவது, காரியசித்தி அதைச் செய்வதைப் பொறுத்திருக்கிறதேயன்றி, அதனால் ஏற்படும் பலனைப் பொறுத்திருக்கவில்லை. நீ உன்னைத் தேற்றிக்கொண்டு, உனது கடமையைச் செய்ய முற்படு! அதன் பலன்களின் பேரிலுள்ள ஆசையைத் துறந்து விடு!"

இதைக்கேட்ட அர்ஜுனன் "இஃதென் சக்திக்குப் புறம்பான விஷயமாகத் தெரிகிறது. வெற்றி, தோல்வியின்

சம்பந்தமான விசாரங்களைத் துறந்து விடுதல், சமத்துவ பாவ மடைதல், ஸ்திர புத்தியுடன் இருத்தல் ஆகிய இவை யெல்லாம் எவ்வாறு லபிக்கும்? அத்தகைய ஸ்திர புத்தியுடையோனுவது எங்ஙனம்? அவனுடைய அடையாளங்கள் என்ன? எனக்கிவற்றை எடுத்துரைப்பாயாக" என்று வினவினன்.

இதைக்கேட்ட பகவான் கூறுகிறர்: "ஹே அர்ஜுன! எவன் தன் ஆசைகள் அனைத்தையும் துறந்து தன்னுள் தானே மகிழ்ச்சி யடைகிறனே, அவனே ஸ்திர சித்தன், ஸ்திர புத்தி யுடையோன், சமாதி நிலையடைந்தோன் என்று சொல்லப்படுகின்றன். அத்தகையோன் துன்பங்கள் வரும்போது மனமுடைந்து போகான். இன்பங்கள் வரும பொழுதும் மகிழ்வுறன். சுகம், துக்கம் முதலிய உணர்ச்சிகள் பஞ்சேந்திரியங்களைச் சார்ந்த விஷயங்களாகும். ஆகவே சதுர புருஷன், ஆமை தன் அவயவங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளுவதே போல், விஷய பதார்த்தங்களிலிருந்து தன் புலன்களை நீக்கித் தன் வசப்படுத்திக் கொள்வான். ஆமையானது தன் சத்ருக்களைக் கண்ட விடத்தில் மட்டும் தன் அவயவங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும். மனிதனுடைய புலன்கள் சதா ஓய்வின்றி விஷய பதார்த்தங்களை நாடித் திரிவதால், அவன் அவற்றைச் சதா தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதைத் தவிர, தானே சுயமாக அவற்றுடன் போராடிக்கொண்டு மிருக்கவேண்டும். இதுவே உண்மையான சமர். சிலர் விஷய பதார்த்தங்களை ஒழிப்பதற்காகத் தங்கள் உடலை வாட்டுகிறர்கள்; உபவாச மிருக்கிறர்கள். இது சரியான முறையே. ஆனல் உபவாசத்தால் மட்டும் விஷய வாசனைகள் அழிவதில்லை. உபவாசம இருக்கையில் இந்திரியங்கள் விஷயங்களைத் தேடியலைவதில்லை. உபவாசம் முடிந்ததும் அவை முன்னைக் காட்டிலும் விஷய வாசனையை அதிகமாக அடையலாம். ஆகவே விஷய வாசனைகளை ஒழிப்பதற்குக் கூட ஈசுவரானுக்கிரகம் தேவையாக இருக்கிறது. இந்திரியங்களுக்கு எவ்வளவு பலம் இருக்கின்றது என்றல், மனிதன் மட்டும் உஷாராக இராவிட்டால்

அவை அவனைப் பலாத்காரமாகத் தம்முடன் இழுத்துக் கொண்டே போய்விடும். ஆகையினால் மனிதன் தன் இந்திரியங்களைச் சதா தன் கைவசப்படுத்தியே வைத்திருத்தல் ஆவசியம். எப்பொழுது மனிதன் ஈஸ்வர த்யானத்தில் ஈடுபட்டுத் தன்னுள்ளேயே—தன் ஹிருதயத்திற் குள்ளேயே வீற்றிருக்கும் அந்தர்யாமியை அறிகிறானோ, அவனைப் பக்தியுடன் தொழுகிறானோ, அப்பொழுது மட்டுமே மனிதனால் தன் புலன்களைக் கட்டுப்படுத்த முடியும். இங்ஙனம் எவன் என்னையே சார்ந்து, இந்திரியங்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுகிறானோ அவனே ஸ்திர புத்தியுடையோன் என்று கூறப்படுகிறான்.

“இனி எவன் அவ்வாறு ஸ்திர புத்தியற்றிருக்கிறானோ, அவனுக்கு எக்கதி யேற்படுகிறது என்று கூறுகிறேன் கேள். எவனுடைய இந்திரியங்கள் சுதந்தர பூர்வமாக விடப்பட்டிருக்கின்றனவோ, அவை தினந்தோறும் விஷய பதார்த்தங்களையே நாடிக்கொண்டிருக்கும். அவற்றின் பேரில் அடங்கா ஆவலுறும். ஆவலின் காரணமாகக் காமம் ஜனிக்கும். காமம் கைகூடாவிடத்துக் கோபம் பிறக்கும். கோபமோ வைத்தியத்தில் பாதி. ஆதலால் கோபம் பிறந்த மாத்திரத்தில் நினைவு தவறி விடுகிறது. நினைவு தவறியவுடன் தடுமாற்ற மேற்படுகிறது. அத்தகைய மனிதன் முடிவில் நாசத்தையே அடைகிறான். மாலுமி யில்லாத மாக்கலம் எவ்விதம் அலைகளின் மீது நிலையற்றுத் தத்தளிக்குமோ, அதேபோலக் கட்டுப்படுத்தப்படாத இந்திரியங்களும் தம்மிஷ்டம் போல் அலைவன! மாலுமியற்ற அம்மரக்கலத்தைக் காற்று இங்கு மங்கும் இழுத்துச் சென்று, முடிவில் ஒரு பாறை மீது மோதுவித்து அதை சின்னபின்ன மாக்குவதே போல், கட்டுப்படுத்தப்படாத இந்திரியங்களும் ஒருவனுடைய மனதைத் தம் வழியே இழுத்துச் சென்று முடிவில் அதை நாச மாக்கிவிடும். ஆதலின், மனிதன் இந்திரிய பதார்த்தங்களிடம் ஆசை வைக்கலாகாது.

“இந்திரியங்களைக்கட்டுப்படுத்தி, அவற்றை நம் வசமாக்கிக்கொள்வ தென்றால் என்ன? அவற்றைத் தீய வழிகளில் செல்லவிடா திருத்தலேயாம். உதாரணமாகக் கண்கள்

நேரே நோக்கட்டும்; புனித வஸ்துக்களையே காணட்டும். காதுகள் பகவானுடைய பஜனைகளையே கேட்கட்டும்; அல்லது துக்கப்படுவோரின் குறைகளையே கேட்கட்டும். கைகளும் கால்களும் பொது நலத் தொண்டில் ஈடுபடட்டும். சகல புலன்களும் மானுட சேவையிலேயே ஈடுபட்டு உழைக்கட்டும். அதிலேயே ஈஸ்வரானுக்கிரஹம் அவசியம் சித்திக்கும். ஈஸ்வரானுக்கிரஹம் ஏற்பட்டவளவில் ஒருவனுடைய சகல துக்கங்களும் தாமே விலகிக் கொள்ளுகின்றன என்று உறுதியாக நம்பு. சூரியனுக்கு முன் பனி உருகி விடுவதே போல் ஈஸ்வரப் பிரசாதம் ஏற்பட்டவுடன் சகல துக்கங்களும் தாமே கரைந்து விடுகின்றன. அத்தகைய அருள் பெற்றோனே உறுதி கொண்ட புத்தியுடையோனாகின்றான். ஸ்திர புத்தியற்றோனுக்கு உத்தம மனோ பாவம் ஏது? நற்பாவனையற்றோனுக்கு மனச் சாந்தி யேது? சாந்தியின்றேல் சுகமேது? ஸ்திர புத்தி யுடையோன் மலைபோல் தெளிவாகக் காண்பனவற்றை, ஸ்திர புத்தி யற்றோன் உலக மாயையில் சிக்கிக் காணத் தவறி விடுகிறான். மேலும் எவை ஏனையோருக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறதோ, அவை சமாதி நிலையையடைந்த யோகிக்கு அற்பமாகவும் கெடுதலாகவும் காணப்படும். ஆதலால் அவற்றை அவன் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. நதிகளின் நீர் சதா வந்து விழுந்து கொண்டிருந்தும், கடலானது சதா அசையா நிலை கொண்டிருப்பதே போல், விஷய விருப்பங்கள் சதா வந்து விழுந்து கொண்டிருப்பினும், யோகியின் மனம் மட்டும் எப்பொழுதும் அமைதியாகவே இருக்கும். ஆனதுபற்றியே சகல விருப்பங்களையும் துறந்து, அகந்தையை அழித்து, எவன் பரந்த நோக்குடையவனாகிறானோ, அவனே சாந்தி யடைகிறான். இந்த சாந்தி நிலையே ஈஸ்வரப் பிராப்திக்கு உகந்த ஸ்திதி. இந்த ஸ்திதியில் இறுதிவரையில் எவன் நிலைத்திருக்கிறானோ அவன் மோக்ஷத்தையே அடைகிறான்.”

எரவாடா மந்திரம்
18—11—1930

பாபுவின் ஆசீர்வாதம்

# கர்ம யோகம்

திங்கள், காலை

ஸ்திர புத்தியுடையோனுடைய லக்ஷணங்களைக் கேட்ட அர்ஜுனனுக்கு மனோ சாந்தி யடைந்து வீற்றிருத்தலே போதுமான தென்று தோன்றிற்று. ஸ்திர புத்தி யுடையோனுடைய லக்ஷணங்களில் 'கர்மம்' என்ற பெயரைக்கூட அவன் (அர்ஜுனன்) கேட்கவில்லை. ஆகவே அவன் பகவானை வினவுகிறான் :—"நினது மொழிகளிலிருந்து கர்மத்தைக் காட்டிலும் ஞானமே சிறந்தது என்று ஏற்படுகிறது. இக்காரணம் பற்றி என் புத்தி கலங்கி விட்டது. செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்த தெனில், என்னை ஏன் இக் கொடிய செய்கையில் (யுத்தத்தில்) புகுத்துகிறாய்? ஞானம், கர்மம் என்ற இவ்விரண்டில் எனக்கு நன்மை தரத் தக்கது எது வென்று எனக்கு அருள்வாயாக !

அதைக் கேட்ட பகவான் "ஹே பாவமற்ற அர்ஜுன ! ஆதியிலிருந்தே இவ்வுலகில் இரண்டு மார்க்கங்கள் இருந்து வருகின்றன. ஒன்று ஞானத்தைப் பிரதானமாகக் கொண்டது. மற்றொன்று கர்மத்தைப் பிரதானமாகக் கொண்டது.

ஆனால் மனிதன் ஒரு க்ஷண நேரமாவது கர்மம் செய்யாமல் சோம்பேறியாக இருக்க முடியாது என்றும், கர்மம் செய்யாமல் எவனும் ஞானத்தை அடைய முடியா தென்றும் யோசித்துப் பார்த்தால் உனக்கே தெரியவரும். சகலத்தையும் துறந்து விடுவதனாலேயே மனிதன் சித்த புருஷன் ஆக முடியாது. ஒவ்வொரு மனிதனும் கொஞ்சம் வேலையாவது செய்து கொண்டிருப்பதையே நீ காண்கிறாய். ஏனெனில் மனித சுபாவமே அத்தகையது. அஃது அவனை யேதேனுமொன்றைச் செய்து கொண்டிருக்கவே தூண்டும். உலக இயல்பு இவ்வாறிருக்க, எவனொருவன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சோம்பேறியாக உட்கார்ந்திருக்கிறானோ, ஆனால் மனதில் மட்டும் அநேக விதமான சங்கற்பங்களையும்

விகற்பங்களையும் கற்பனை செய்து கொண்டிருக்கிறானோ, அவனை மூர்க்கர்களில் ஒருவனாகவே கருத வேண்டும். கள்ள ஆசாரமுடையோனாகவும் கூறலாம். இதை விட இந்திரியங்களைத் தன் வசப்படுத்திக் கொண்டு, விருப்பு வெறுப்பற்று, ஆத்ம வஞ்சகமற்று, பற்றற்றோனாகி--அதாவது பலன்களின் பேரில் ஆசையைத் துறந்தோனாகி-- கை கால்களால் ஏதேனுமொன்றைச் செய்து கொண்டு, கர்ம யோகத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருத்தல் சாலச் சிறந்ததன்றோ? ஆதலால் நீ இந்திரியங்களை உன் வசப் படுத்திக்கொண்டு, உன் நித்திய கர்மத்தை—உனக்கென்று ஏற்பட்ட சேவாகாரியத்தைச் செய்து கொண்டிரு. சோம்பி உட்கார்ந்திருப்பதை விட இம் முறை சிறந்தது. சோம்பல் பட்டு உட்கார்ந்திருப்பவருடைய உடல் முடிவில் க்ஷீணித்துப் போம். ஆனால் கர்மம் செய்கையில் யக்ஞ காரியத்தைத் தவிர (பரோபகாரமான தொண்டு) மற்ற கர்மங்கள் அனைத்தும் மனிதனை அடிமைப் படுத்தி விடுகின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யக்ஞம் என்பதற்கு சுயநலமின்றிப் பரோபகாரத்திற்காக எடுத்துக்கொண்ட சிரமம், அல்லது இன்னும் சுருக்கமாகக் கூறுமிடத்து சேவை என்று பொருள். ஆகையினால் எவன் சேவையின் பொருட்டாகவே சேவை செய்கிறானோ, அவனே புனிதன். விருப்பு வெறுப்பு அவனிடம் தலை காட்டா. விஜயா! ஆனதுபற்றியே நீயும் யக்ஞம்—சேவை—செய்து வா."

"பிரும்மா இவ்வுலகத்தைப் படைத்த காலத்திலேயே யக்ஞத்தையும் (சேவையையும்) கூடவே சிருஷ்டித்து, நமது காதுகளில், "பிருதிவியின் மேல் ஜனனமெடு; பரஸ்பரம் சேவை செய்; விருத்தி செய். சகல ஜீவன்களையும் தேவர்களின் ரூபமாகக் கருது" என்று ஓதினார். ஆகவே நீ இந்த தேவதா ஸ்வரூபங்களுக்குச் சேவை செய்து அவர்களை மகிழச் செய். அப்பொழுது அவர்களும் உன்னை மகிழச் செய்வார்கள். மன மகிழ்வெய்திய தேவர்கள் நீ கேட்காமலே உனக்குப் பலனளிப்பார்கள். எவனொருவன் உலக சேவை செய்யாமல் உலகத்தவரின் பகுதியை-அவர்களுக்கு உரித்தான

பங்கை அவர்களுக்குக் கொடுக்காமல், தன் வயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்ளுகிருனே, அவனைத் திருடன் என்றே கூறலாம். ஆனால் எவனொருவன் உலகத்தில் சகல ஜீவன்களுக்கும் உரித்தான அதனைதன் பங்கை யடையச் செய்துவிட்டுத் தன் பங்காகிய உணவை உட்கொள்ளுகிருனே— அல்லது தன் பாகத்தை யனுபவிக்கிருனே, அவனே மேலோன். அவனுக்கு அதை யனுபவிக்க உரிமையுமுண்டு. அவன் பாவத்தினின்றும் விடுபடுகிருன். ஆனால் அதற்கு மாருக எவன் தனக்கென்றே பொருளீட்டுகிருனே, தொழில் செய்கிருனே, அவனே பாவி. அவனுண்பதும் பாவமயமான அன்னம்.' சிருஷ்டியின் நியாயம் என்னவென்ருல், ஆகாரத்தினுல் ஜீவன்கள் பிழைக்கின்றன. ஆகாராதிகள் மழையினுல் விளைகின்றன. மழை யக்ஞத்தால் அல்லது ஜீவன்களின் உழைப்பால் ஏற்படுகிறது. எங்கே ஜீவன்கள் இல்லையோ, அங்கே மழையும் இல்லை. எங்கு ஜீவன்களுண்டோ, அங்கு மழையுமுண்டு. சிரமப்பட்டு ஜீவிப்பவனே—அதாவது உழைப்பின் பயனுய் ஜீவிப்பவனே உயிர் பெற்றவனுகிருன். எவனும் படுத்துக்கொண்டே உயிர் வாழ முடியாது. சோம்பலாகவே இருந்து கொண்டு காலம் கழிக்கலாம் என்ற மூட எண்ணம் மட்டும் மனித வர்க்கத்தவரின் உள்ளத்தில் குடி கொள்ளுமே யானுல், அதனுல் உலகத்திற்கு எத்தகைய பெருங் கஷ்டம் ஏற்படும் என்று யோசித்துப் பார். "பின்னும் பகவான் சொல்லுகிருர் :— "கர்மத்தை பிரும்மா படைத்தார். பிரும்மாவை அக்ஷர பிரும்மா படைத்தார்" என்ருர். ஆகவே யக்ஞ மெனப்படும் பரோபகாரார்த்தமான சேவையிலேயே அக்ஷர பிரும்மாவான பரமேசுவரன் எழுந்தருளியுள்ளார் என்று அறிதல் வேண்டும். இந்த சேவா முறையில் எவன் ஒழுகுவதில்லையோ, அவன் பாவி. அவன் வாழ்க்கையும் பூமிக்கு வீண் பாரமானதே.

செவ்வாய், காலை.

சாந்த நிலையை எய்திச் சதா சந்துஷ்டனாக விருப்போனுக்கு யாதொரு தொழிலு மில்லை யென்றே கூறலாம். தொழில் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அவனுக்கு அதனால் யாதொரு லாப நஷ்டமும் இல்லை. அவனுக்கு எதன் பேரிலும் சுயநல மென்பதில்லை. எனினும், யக்ஞ காரியங்களை மட்டும் எவனும் கை விடலாகாது. ஆகவே நீ உனது நித்ய கர்மங்களாகிய கடமையைச் செய்து கொண்டிரு. ஆனால் அதில் விருப்பு வெறுப்புக் கொள்ளாதே. அதில் பற்றுக் கொள்ளாதே. பற்றற்றுத் தொண்டாற்றுவோன் பரம்பொருளையே அடைகிறான். இன்னும் கேள். ஜனகரைப் போன்ற பற்றற்ற அரசர்களும் தம் கடமையைச் செய்து கொண்டே சித்தி யடைந்திருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் சதா உலக உபகாரத்தையே மனதுட் கொண்டு கடமை செய்தனர். அப்படியானால் நீ மட்டும் இதற்கு மாறாக ஏன் நடந்து கொள்ள வேண்டும்? உலக சம்பிரதாயம் எப்படி யிருக்கிறதென்றால், நல்லவர்கள், பெரியோர்கள் என்று கருதப்படும் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்களோ, அவ்வாறே ஏனைய சாதாரண ஜனங்களும் நடக்க முற்படுகிறார்கள். உதாரணத்திற்கு என்னையே எடுத்துக் கொள். தொழில் செய்து நான் என்ன நலனை அடைய விருக்கிறது? எனினும் நான் 24 மணி நேரமும் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கிறேன். ஜனங்களும் என்னைப் பின்பற்றி நடந்து கொள்ளுகின்றனர். நான் மட்டும் சோம்பேறியாக இருப்பேனாகில், உலகம் எக்கதி யடையும் தெரியுமா? சூரிய, சந்திர நக்ஷத்திரங்கள் ஸ்தம்பித்துப் போய் விடும். உலகமே அழிந்துவிடும். ஏனெனில் இவ்வனைத்தையும் இயக்குவோனும், ஒழுங்கு படுத்துவோனும் நானே யன்றோ? இவ்வனைத்தும் நீ யறிவாயாக! ஆனால் எனக்கும் ஜனங்களுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால், நான் பற்றற்றவன். ஜனங்களோ பற்றுடையோர். அவர்கள் தங்கள் நலத்தைக் கருதியே தொழில் புரிகின்றனர். நானோ உலக நன்மைக்காகத் தொழில் புரிகின்றேன். நிற்க,

உன்னைப் போன்ற அறிவாளிகளே தங்கள் தொழிலைத் துறந்துவிடின், இதர ஜனங்களும் அதைப் பின்பற்றி நடக்க முற்படுவர். கர்ம பிரஷ்டர்கள் ஆவர். நீ பற்றற்று உன் கடமையைச் செய்து வா. அதைக் கண்டு ஜனங்களும் தம் தம் கடமையைச் செய்யவும், படிப்படியாக அனாஸக்தர்களாகவும் பழகட்டும். ஒவ்வொருவனும் தனக்கு இயற்கையிலேயே ஏற்பட்ட குணத்தை யொட்டி, ஏதோனுமோர் கடமையைச் செய்து கொண்டே யிருப்பான். மூர்க்கனே "இதை நான் செய்தேன். அதை நான் செய்தேன்" என்று வீண் பெருமை கொள்வான். அறிவாளி அவ்வாறு கருதான். மூச்சுவிடுதல் சகல ஜீவராசிகளுக்கும் இயல்பானது. சுபாவமானது. கண்களின் பேரில் ஏதேனும் விழுமானால், மனிதன் தன்னை யறியாமலே—சுபாவமாகவே இமையைக் கொட்டுகிறான். அப்பொழுதெல்லாம் அவன் "நானே சுவாசம் விட்டேன்; நானே இமையை அசைத்தேன்" என்று சொல்லிக் கொள்ளுவதில்லை. இதே போல் ஒருவன் எத்தனை கர்மங்கள் செய்த போதிலும்—அவை அத்தனையும் சுபாவமாக-அவனவன் குணானுசாரங்களை யொட்டிச் செய்யப்பட்டவைகளாகவே ஏன் கருதக் கூடாது? அதற்கு மாறாக "நான், நான்" என்ற அகங்காரம் தோன்றுவானேன்?

"மமதையற்றுச் சகஜமாகத் தொழில் புரிவதற்கேற்ற ராஜ மார்க்கம் யாதெனில், சகல கர்மங்களையும் எனக்கென்று அர்ப்பணம் செய்து விடுதலே யாம். எல்லாக் கர்மங்களையும் என் பொருட்டு, மமதையற்றுச் செய்வதேயாம். இவ்வாறு என் பொருட்டுக் கர்மம் செய்து வந்தால், நாளடைவில் அகங்காரமும், சுயநலமும் அழிந்து வரும். அப்பொழுது அவன் கர்மங்கள் அனைத்தும் சுபாவமானவைகளாகவும், தோஷ மற்றவைகளாகவும் மாறிவிடும். அவன் பலவித குழப்பங்களிலிருந்து விடுபடுகிறான். அவனை எத்தொழிலும் கட்டுப்படுத்தா. மேலும் சுபாவத்தை யொட்டித் தொழில் புரியும் பழக்க முடையோனை அத்தொழிலைச் செய்யாதிருக்கத் தூண்டுவதும் முடியாத காரியமாகும்.

"உண்மையைக் கூறுமிடத்து, இந்திரியங்களுக்கும் அதனதற்குரிய விஷய பதார்த்தங்களின் பேரில் விருப்பு, வெறுப்புத் தோன்றுகின்றன. செவிக்கு ஒரு விஷயத்தைக் கேட்கப் பிரியம் ஏற்படுகிறது; வேறு ஒரு விஷயம் பிடிக்கிறதில்லை. மூக்கு ரோஜா மலரை முகரப் பிரியப்படுகிறது; மல ஜலங்களின் துர்க்கந்தம் வெறுப்பை யளிக்கிறது. இவ்விதமே சகல இந்திரியங்களும் விருப்பு வெறுப்புக் கொள்ளுகின்றன. ஆகவே மனிதன் இந்த விருப்பு, வெறுப்புள்ள கொள்ளைக் கூட்டமான இந்திரியங்களுக்கு வசப்படலாகாது. இவற்றைக் களைந்து விலக்கிவிட வேண்டும். தவிரவும், தொழில் சம்பந்தப்பட்ட வரையில் இன்று இது, நாளை அது என்று வீணாக அலையாதிருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொருவனும் தன் பாகமென்று ஏதேனுமோர் பொது நலத்தொண்டை மேற்கொண்டு, அதை ஈஸ்வரார்ப்பணமாக்கி, தொழில் புரிந்து கொண்டே யிருத்தல் வேண்டும். இந்த மனோ பாவத்துடன் தொழில் புரிவோமானால், 'நாம் செய்யும் தொழிலனைத்தையும் ஈஸ்வரனே செய்விக்கிறான்' என்ற மனத் தெளிவேற்படும். அப்பொழுது ஞானமேற்படும். அகம்பாவம் அழிவுறும். இவ்வாறு ஒழுகுவதற்கே ஸ்வதர்மம் என்று பெயர். நீ உன் ஸ்வதர்மத்தில் நிலைகொள். அதுவே உனக்கு உகந்தது. பரதர்மம் வெளித்தோற்றத்திற்கு வெகு நன்றாகக் காணப்படலாம். ஆனால் அது பயங்கரமானது. ஸ்வதர்மத்தைச் செய்து கொண்டிருக்கையில் மரணம் ஏற்பட்டால் அஃது மோக்ஷத்தையே தரும். விருப்பு வெறுப்பற்றுக் கர்மம் செய்வதே யக்ஞமாகும்."

இவ்விதம் பகவான் உரைத்தல் கேட்ட அர்ஜுனன், "மனிதன் யாருடைய தூண்டுதலின் பேரில் பாவகர்மத்தில் ஈடு படுகிறான்? யாரோ ஒருவன் பலாத்காரமாக அவனைப் பாவகர்மத்தில் ஈடுபடும்படி செய்ய இழுத்துக் கொண்டுபோவதாகத் தோன்றுகிறதே! இதன் உண்மை யென்ன?" என்று வினவினான்.

பகவான் பதில் கூறுகிறார்: "மனிதனைப் பாவ கர்மத்தில் இழுத்து விடுவது இச்சையும் கோபமும் என்றுணர்.

3495

இவை இரண்டும் கூடப்பிறந்த சகோதரர்கள். காமம் கை கூடா விடத்து குரோதம் வந்து தோன்றி விடுகிறது. காமமும் குரோதமும் நிறைந்தோனை ரஜோகுணன் என்றழைக்கிருேம். இந்த ரஜோ குணங்களே மனித வர்க்கத்திற்குப் பெரிய சத்துருக்கள். இவற்றுடன் மனிதவர்க்கம் தினந்தோறும் போராடிக் கொண்டேயிருக்கிறது. கண்ணுடியின் பேரில மாசு படிந்திருக்கும் வரை, அது மங்கலாகவே காணப்படும். புகை சூழ்ந்திருக்கும் வரை, தீ நன்ருகக் கொழுந்து விட்டெரியாது. கர்ப்பப்பை கர்ப்பத்தால் நிறைந்திருக்கும் வரையில், திணறிக் கொண்டே தானிருக்கும். இத்தன்மை போல் காமமும் குரோதமும் நிறைந்திருக்கும் வரை ஞானியின் அறிவு ஒளி பெறுவதில்லை. விருப்பமானது அக்னியைப் போல் மஹா பயங்கரமானது. இது இந்திரியங்கள், மனம், புத்தி முதலிய யாவற்றையும் தன் வசப்படுத்திக் கொண்டு மனிதனை வாட்டுகிறது. ஆகவே முதலில் நீ இந்திரியங்களை உன் வசப்படுத்திக் கொள். பின் மனம் தானே வலிய வசப்படும். கடைசியில் புத்தியும் உன் வசமாவது உறுதி. ஏனெனில் இந்திரியங்கள், மனம், புத்தி இவை, ஒன்றைவிட மற்ருென்று அதிக வலிமை யுடையனவாக விருப்பினும், இவை எல்லா வற்றைக் காட்டிலும் ஆத்மா அதிக வலிமை யுடையது. மனிதன் தன் ஆத்ம சக்தியை அறிந்து கொள்வதில்லை. இக் காரணம் பற்றியே இந்திரியங்கள், மனம், புத்தி, இவை தன்வசப் படுகிறதில்லை என்று அவன் கருதுகிருன். ஆத்ம சக்தியின் பிரகாசம் ஏற்பட்ட மாத்திரத்தில் எலலாம் சுலபமாகி விடுகிறது. மேலும் இந்திரியங்கள், மனம், புத்தி முதலியவற்றைத் தன் வசப்படுத்திக் கொண்டுள்ளவனைக் காமம், குரோதம் முதலியவும், அவற்றின் கணக்கற்ற சேனைக் கூட்டங்களும் ஒன்றும் செய்ய முடியாது.”

இந்த அத்தியாயத்தை நான் கீதையை அறிவதற்கான திறவுகோல் என்று மதிக்கிறேன். இதன் சாராம்சத்தை ஒரே வாக்யத்தில் கூறவேண்டுமாயின் வாழ்க்கை பரோபகாரமான **சேவை செய்வதற்காகவே அளிக்கப்பட்டிருக்கிறது; சுக**

மடைவதற்கல்ல என்று ஏற்படுகிறது. ஆகவே நாம் வாழ்க்கையை யக்ஞமயமாக்கிக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை அறிந்து கொள்ளுவதால் மட்டும் நம் வாழ்க்கை ஸேவா மயமாகி விடாது. ஆனால் அறிந்தவற்றை நடைமுறையில் நடத்திக் காட்ட முற்படவேண்டும். அப்பொழுது தான் நாம் படிப்படியாக சுத்தமடைவோம்.

இனி, நல்ல சேவை யென்பதெது என்று ஆராய்வோம். இதை அறிவதற்கு இந்திரியங்களை எரித்து விடுதல் அவசியம். அவ்வாறு செய்து விட்டால் நாம் நாளடைவில் சத்யரூபியான பரமாத்மாவை நெருங்குகிறோம். யுகந்தோறும் நமக்கு சத்யத்தின் தரிசனம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஸேவா கார்யங்களும் சுயநலங் கருதி செய்யப்படின், அது யக்ஞமாகாது. ஆனது பற்றியே பற்றின்மையை அடையவேண்டியது அவசியமாகிறது. இத்துணை அறிவு நமக்கேற்பட்ட பின் வேறுவித வாச்கு வாதங்களில் நாம் தலையிடத் தேவையில்லை. அர்ஜுனன் தன் பந்து ஜனங்களையே கொல்லத் தூண்டப்பட்டானா? அவ்வாறு தூண்டப்பட்டிருப்பின் அது தர்மமாகுமா? என்பவை போன்ற கேள்விகளே எழா. பற்றின்மை நமக்கேற்பட்டவுடன் எவனையேனும் கொல்லுவதற் கென்று நமது கையில் ஆயுதம் இருப்பினும், அஃது சகஜமாகவே நழுவிவிடும். ஆனால் வீண் ஆடம்பரங்களினால் பற்றின்மை ஏற்பட்டு விடாது. நாம் முயற்சி செய்வோமானால், அஃது இன்றே கைகூடினாலும் கூடலாம். அல்லது ஆயிரம் வருஷங்கள் வரை பிரயத்தனம் செய்த பின்பும் அது கிடைக்காதிருக்கலாம். இதைப் பற்றிய கவலையையும் நாம் துறந்துவிட வேண்டியதே. முயற்சியே பலனளிக்கும். எப்படியும் நாம் இந்தப் பற்றின்மையை அடைந்தே தீரவேண்டும். இதில் ஆத்ம ஏமாற்றம் கூடாது. இவ்வளவு தூரம் இதில் கவனம் செலுத்தினாலே போதும். முடிவில் அது அனைவருக்கும் சாத்யமாகும்.

எரவாடா மந்திரம்,
14 & 15-11-1930 — பாபுவின் ஆசீர்வாதம்

# ஞான-கர்ம யோகம்—4

திங்கள், காலை.

பகவான் அர்ஜுனனிடம் கூறுகிறார்:—"ஹே பார்த்த! நான் உனக்கு இதுவரை போதித்த "நிஷ்காம-கர்ம யோகம்" (பற்றற்ற தொண்டு) பூர்வகாலந் தொட்டே பரம்பரையாக வழக்கத்தில் இருந்துவரும் தர்மமாகும். இது புதிய விஷமமல்ல. நீ என் பிரியமுள்ள பக்தன். மேலும் இன்று நீ தர்ம சங்கடத்தில் மூழ்கி யிருக்கிறாய். உன்னை இக்குழப்பத்திலிருந்து மீட்பதற்காகவே இதனை உனக்கு கூறினேன். எவ்வெப்பொழுது தர்மம் குன்றி அதர்மம் மேலிடுகிறதோ, அவ்வப்பொழுது நான் இம்மண்ணில் அவதரிக்கிறேன். பக்தர்களை ரக்ஷிக்கிறேன்; பாவிகளை ஸம்ஹரிக்கிறேன். யார் எனது இந்த மாயையை அறிகிறார்களோ, அதர்மம் அழிந்தே தீருமென்று நம்புகிறார்களோ, சாதுக்களைக் கடவுளே ரக்ஷிக்கிறார் என்று நம்புகிறார்களோ, அவர்கள் தங்கள் தர்மத்தைத் துறப்பதில்லை. முடிவில் அவர்கள் என்னையே அடைகிறார்கள். ஏனெனில் அவர்கள் என்னையே சதா தியானிப்பவர்களாகின்றனர்; என்னையே சரணடைந்தவர்களாகின்றனர். காம குரோதாதிகளிலிருந்து விடுபட்டவர்களாகின்றனர். தவம், ஞானம் இவற்றின் மூலம் சுத்தமடைந்தோராகின்றனர். மனிதன் எங்ஙனம் தொழில் புரிகின்றானோ, அங்ஙனமே பலனடைகிறான். எனது இந்த விதிகளுக்கு மாறாக நடக்க எவனாலும் முடியாது. குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை ஏற்படுத்தியுள்ளேன். எனினும் அவற்றின் கர்த்தா நானல்ல—என்றுணர். ஏனெனில் அக்கார்யங்களின் பலன்களின் பேரில் எனக்குக் கிஞ்சித்தேனும் பற்றென்பதில்லை. அதன் பாவ புண்ணியங்கள் என்னைச் சேரா. இதை ஈஸ்வர மாயை எனலாம். இவ்வுலகத்தில் நடைபெறும் தொழிலனைத்தும் ஈஸ்வரனுடைய கட்டளைப்படியே நடைபெறுகின்றன. எனினும் ஈஸ்வரன் அவற்றின் சார்படைவதில்லை ஆகவே ஈஸ்வரனை அவற்றின் கர்த்தாவென்றும் கூறலாம். கர்த்தா வல்லவென்றும் கூறலாம். இவ்

விதம் தூர விலகினின்று, ஏமாற்றமின்றி, பலன்களை இச்சிக்காது ஈஸ்வரன் எவ்வாறு நடந்து கொள்ளுகிருரோ, அவ்வாறே மானிடர்களும் நடந்து கொள்ளுவார்களாளுல், அவர்கள் தடையின்றி மோக்ஷத்தையே யடைவார்கள். அத்தகையோர் தொழிலிலும் தொழிலின்மையைக் காண்கிருர்கள். அத்தகையோர் செய்யத் தகுதியற்றவை இவை யென்றும் விரைவில் கண்டு கொள்கிருர்கள். ஆசையுள்ளவனும், ஆசையுருதிருக்க முடியாதவனும் தகுதியற்ற கர்மங்களைச் செய்யாமல் தம்மைத் தடுத்துக் கொள்ளுவதே ஒரு விதத்தில் கர்மமாகும். உதாரணமாகத் திருட்டும், விபசாரமும் செய்யாதிருப்பதே கடமையாகும். இவற்றைப் பற்றுதலின்றிச் செய்ய முடியாது. எவன் காமமும் சங்கற்பமுமின்றித் தன் கடமையை மட்டும் செய்து கொண்டிருக்கிருனே, அவன் உண்மையான ஞானமென்ற அக்னியில் தன் கர்மத்தை எரித்தவனுகிருன். அதாவது அவன் பலனைக் கருதுவதில்லை.இவ்விதம் எவன் தன் கர்ம பலனைத் துறந்துவிடுகிருனே, அவன் சதா சந்துஷ்டனுக இருப்பான்; சதா ஸ்வதந்திர புருஷனுகவே இருப்பான். அவனது மனமும் ஸ்திரமாகவே இருக்கும். பிணியற்ற தேகத்தில் சரீர கிரியைகள் எவ்வாறு சகஜமாகவும், ஸ்பாவமாகவும் நடைபெற்று வருகின்றனவோ, அவ்வாறே பற்றற்ற யோகியின் கர்மங்களும் ஸ்பாவமாகவே நடைபெறும். அவன் தானுகவே அவற்றைச் செய்தாலும், அவற்றின்பால் கர்வமடைவதில்லை. செய்ய வேண்டிய நிமித்தத்திற்காகவே அவன் அவற்றைச் செய்து வருகிருன். தன் கர்மங்கள் வெற்றியடைந்தாலும் சரி, தோல்வி யுற்றுலும் சரி, அவற்றிற்காக அவன் மகிழ்வதுமில்லை, வருந்துவதுமில்லை. அவன் கர்மங்கள் அனைத்தும் யக்ஞ ரூபமாக—ஸேவார்த்தமாகவே செய்யப்படுகின்றன. ஆதலின் அவன் சகல கர்மங்களிலும் ஈஸ்வரனையே காண்கிருன். முடிவில் ஈஸ்வரனையே அடைகிருன்.

"யக்ஞ மெனப்படுவது பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவையனைத்திற்கும் அடிப்படையானது தூய்மையும் ஸேவையுமாம். இந்திரியக் கட்டுப்பாடு ஒரு வகையான யக்ஞமாகும். யாருக்கேனும் தானமளித்தல் மற்றெரு விதமான

யக்ஞமாகும். பிராணுயாமம் முதலிய அப்யாசங்களும் சரீர சுத்திக்காகச் செய்யப்படும் யக்ஞங்களே. இவற்றை பழக்க முள்ள ஒரு குருவிடம் கற்றுக் கொள்ளவேண்டும். நன்றாக அறிந்து கொள்ளாமல் ஞானத்தின் பெயரால் பலவித கர்மங் களைத் தொடங்கி விடுவோமாஞல், ஞானத்திற்குப் பதிலாக அஞ்ஞான மேற்பட்டு, நன்மைக்கு பதிலாக தீமைகளேற் பட்டுவிடும். ஆதலால் ஒவ்வொரு கார்யத்தையும் தீர்க்க ஆராய்ச்சி செய்து, ஞானபூர்வமாகச் செய்யவேண்டும்.

"இந்த ஞானம் எழுத்து ஞானமன்று. இந்த ஞானத்தில் சந்தேகத்திற் கிடமேயில்லை. சிரத்தையிலிருந்து இது ஆரம்ப மாகிறது. அனுபவத்திஞல் முதிருகிறது. இந்த ஞானத் தின் மூலம் மனிதன் சகல ஜீவராசிகளையும் தன்னுள் காண் கிருன். தன்னை ஈஸ்வரனிடத்தில் காண்கிருன். அதாவது அவனுக்கு எல்லாம் பிரத்யக்ஷ ஈஸ்வர மயமாகவே தோன் றும். இந்த ஞானம் பாவிகளில் பாவிகளைக் கூட ஈடேற்று விக்கிறது. இந்த ஞானம் மனிதனைக் கர்ம பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. அதாவது கர்மத்தின் பலன் அவனைத் தீண்டு வதில்லை. இதைப்போல் புனிதமானது இவ்வுலகத்தில் வேறொன்றுமில்லை. ஆகவே பாண்டவ! நீ சிரத்தையுடன், ஈஸ்வரனை நம்பி, உன் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, இந்த ஞானத்தை யடையப் பிரயத்தனப்படு. அத ஞல் உனக்குப் பரம சாந்தி ஏற்படும்."

இந்த அத்தியாயமும், மூன்ருவது, ஐந்தாவது அத்தியாய மும் சேர்ந்தாற்போல் உருப்போட்டு த்யானம் செய்யத்தக் கவை. இதஞல் அஞசக்தி யோகம் (பற்றற்ற தொண்டு) என்பது யாதென ஸ்பஷ்டமாகத் தெரியும். இந்த அஞ சக்தி—நிஷ்காம கர்மம் எவ்வாறு கைகூடும் என்பதை இம் மூன்று அத்தியாயங்களும் போதிக்கின்றன. இவற்றை ஐபந் திரிபறப் படித்துத் தெரிந்து கொண்டால், மற்ற அத்தியாயங் களை அறிந்து கொள்ளுவதில் கஷ்டமே இருக்காது. இனி வரும் அத்தியாயங்கள் அஞசக்தியை அடையும் சாதனங்களை அநேக விதமாக விளக்குகின்றன. அந்த சாதனங்களையும்

அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் நாம் தினமும் கீதையைப் படித்தல் வேண்டும்.

இனி கீதையைப் பாடம் செய்வதால் என்ன பிரயோசனம் ஏற்படுகிறதென்று கூர்ந்து கவனிப்போம். கோபம் பொங்கி வரும்பொழுது அதனாலேற்படும் பிரதி கூலங்களைப் பற்றிக் கூறும் ஸ்லோகங்களை நினைவு படுத்திக்கொண்டு, அதை யடக்கலாம். யார் பேரிலேனும் த்வேஷம் ஏற்படும் பொழுதும், நமக்கு தைரியம் குறையும் பொழுதும், என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாதென்ற தர்மசங்கடம் நேரும் பொழுதும் (சிரத்தையுடன் கீதையை மனப்பாடம் செய்திருப்போமானால்) கீதையின் மூலம் நமக்கு மார்க்கம் தெளிவு படுமன்றோ? அத்தகைய பழக்கம் ஏற்படுவதற்காகவே கீதையை தினந்தோறும் பாராயணம் செய்வோமாக.

ஏரவாடா மந்திரம்,
1—12—1930.

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## ஸந்யாச யோகம்—5

திங்கள் காலை.

அர்ஜுனன் கேட்கிறான்:—"ஹே பகவான்! ஞானத்தைப்பற்றி அதிகம் கூறினை. அதைக்கேட்ட எனக்குக் கர்மம் செய்யவே தேவையில்லை யென்றும், ஸந்யாசமே மேலான மார்க்க மென்றும் தோன்றுகிறது. ஆனால் கூடவே தொழிலின் பெருமையைப் பற்றியும் கூறினை. அதைக் கேட்டபின் யோகமே (ஸேவா கர்மம்) ஞானத்திலும் சிறந்ததென்று தோன்றுகிறது. இவ்விரண்டில் எது அதிகம் சிறந்தது என்று நிச்சயப்படுத்திக் கூறுவாயானால் எனக்குச் சற்று நிம்மதி யேற்படும்" என்றான்.

அர்ஜுனன் இவ்வாறு உரைத்தல் கேட்டு, பகவான் சொல்லுகிறார்:—"ஸந்யாச மென்பதற்கு ஞானமென்றும்,

கர்மயோக மென்பதற்கு நிஷ்காம கர்மம் என்றும் பொருள். இவ்விரண்டும் உத்தமமானவைகளே. ஆனால் யோகம் அல்லது பற்றற்ற கர்மமே சர்வ சிரேஷ்டமானதென்று கூறுவேன். எவனொருவன் எவரிடமும் த்வேஷம் பாராட்டாமலும், விருப்பு வெறுப்புக் கொள்ளாமலும், சுகம் துக்கம், சீதம் உஷ்ணம் முதலிய இரட்டைகளிலிருந்து விலகி நிற்கிறானோ, அவனே ஸந்யாசி. கர்மங்களை அவன் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அவன் விரைவில் பந்தங்களிருந்து விடுபடுகிறான். அஞ்ஞானிகளே ஞானத்தையும் கர்மத்தையும் வெவ்வேறெனக் கருதுகிறார்கள். ஞானி அவ்வாறு கருதான். அவனுக்கு அவை இரண்டும் ஒன்றே. ஏனெனில் அவை இரண்டின் பலனும் ஒரே விதமானது. ஆகையினால் அவ்விரண்டையும் ஒரே ரூபமானதென்று கருதுவோனே உண்மை யறிந்தோனாகிறான். ஏனெனில் சுத்த ஞான முடையோன் தனது சங்கற்பத்தாலேயே கார்ய சித்தி யடைகிறான்.

"அதாவது அவனுக்குத் தனது கைகளினாலேயே கர்மம் செய்யவேண்டிய நிமித்தமில்லை. ஒரு உதாரணம்: ஜனகபுரி தீப்பற்றி எரிந்தபொழுது, அவ்வக்னியைத் தணிப்பதே எல்லாருடைய கடமையாக விருந்தது. ஜனகருடைய சங்கற்பத்தாலேயே நெருப்பை அணைக்க உதவி கிடைத்தது. ஏனெனில் இந்தக் காரியத்தை முடிப்பதற்குப் பணியாளரே அவருக்குற்ற சாதனமாக விருந்தனர். அதற்கு மாறாக, அவர் தாமே தம் கையில் நீர்க்குடத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டிருப்பாரே யானால் மிக்க சேதம் ஏற்பட்டிருக்கும். எவ்வாறென்றால், அனைவரும் அவர் (ஜனகர்) முகத்தையே நோக்கிக் கொண்டிருப்பார்கள்; தங்கள் கடமையை மறந்திருப்பார்கள்; தவிர, அவர்களில் சிலர் தமது வேலையை அரைகுறையாக விட்டு விட்டு, ஜனகரைத் தீ சூழாமல் செய்யவும், அவரைப் பாதுகாக்கவும் முற்படுவார்கள். ஆனால் அனைவரும் ஜனகரைப்போல ஆக முடியாது. ஜனகருடைய ஸ்திதி அதிக துர்லபமானது. கோடியில் ஒருவருக்கு, அநேக ஜன்மங்களாகச் சேவை செய்து, அந்த ஸ்திதி பிராப்திக்கும்.

இந்த ஸ்திதியை அடைந்த பின் ஏதேனும் விசேஷ சாந்தியா வது சித்திக்கிறதா வென்றால் அதுவுமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நிஷ்காம்ய கர்மம் செய்து வருவதனால், மனித னுடைய சங்கற்பமும் விருத்தி யாகிக்கொண்டே வரும். அதற்கேற்றாப்போல் கை கால்களினால் செய்ய வேண்டிய கர் மங்கள் குறைந்து கொண்டே வரும். ஆனால் உண்மையைக் கூறுமிடத்து அவனுக்கு தன் நிலைமை மாறுபடுவதன் தக வலே தெரியாது. அதற்காக (சங்கற்ப சக்தி) அவன் பிரயத் தனமும் செய்வதில்லை. அவன் சதா ஸேவா கார்யங்களி லேயே மெய் மறந்திருப்பான். ஸேவை செய்வதில் அவனுக் குக் களைப்புத் தோன்றுவதில்லை. முடிவில் அவன் கேவலம் தன் சங்கற்பத்தாலேயே தொண்டு செய்யும் நிலைமை அடைந்து விடுகிறான். அதிவிரைவில் சுழன்று கொண்டி ருக்கும் பம்பரம் சலனமற்று நிற்பதாகவே தோன்றுவதே போல, முதிர்ந்த பக்குவமடைந்த ஸேவா யோகி சதா தொழில் செய்யாதவனைப் போலவே காணப்படுவான். ஆகவே அவனை ஒரு தொழிலும் செய்யாதவன் என்று கூறுதல் தவறு. சாதாரணமாக அத்தகைய நிலைமையைக் கற்பனை செய்து கொள்ளக் கூடுமே யன்றி அனுபவத்துடன் வர்ணனை செய்ய முடியாது. இக்காரணம் பற்றியே நான் கர்ம யோ கத்தை விசேஷப்படுத்திக் கூறினேன். கோடிக் கணக்கான வர்கள் நிஷ்காம கர்மத்தினாலேயே ஸந்யாசத்தின் பலனை எய்துகிறார்கள். அவர்கள் ஸந்யாசிகளாக மாறியிருப்பின், இரண்டும் கெட்டவர்களாவது திண்ணம். ஸந்யாஸிகளாகப் பிரயத்னப் படுவோரில் பெரும்பான்மையோர்கள் பொய்யா சார புருஷர்களாகத் தமது கடமையிலிருந்து வழுவி விடு கின்றனர்; சர்வ நாசமடைகின்றனர். ஆனால் எவனொரு வன் பற்றற்ற தொண்டு செய்து பரிசுத்த மடைகிறானோ, தன் புலன்களை வசப்படுத்திக் கொள்ளுகிறானோ, தன் மனதை வென்று விடுகிறானோ, சகல ஜீவன்களிடத்தும் ஐக்யப்படு கிறானோ, அவனே அனைவரையும் தனக்குச் சமமாக கருதுகி றான். அவன் தொழில் புரிந்துகொண்டே அவற்றினின்றும் பிரிந்து நிற்கிறான். அதாவது பந்தங்களிலிருந்து விடுபடு

கிறான். அத்தகையோன் பேசுதல், நடத்தல் போன்ற கிரியைகளைச் செய்து கொண்டேயிருப்பினும், அவனது கிரியைகளும், இந்திரியங்களும் தத்தமது தர்மானுசாரமாகவே நடந்து கொள்ளும். அவன் தானாகவே ஒன்றும் செய்வதில்லை. வியாதியற்ற ஒருவனுடைய சரீரக் கிரியைகள் ஸ்வபாவமாகவே நடைபெறுகின்றன. அவனது அவயவங்களும் தாமே தமது கடமைகளைச் செய்து விடுகின்றன. மனிதன் அவற்றின் பால் கவனம் செலுத்தத் தேவையில்லை. இவ்விதமே எவனுடைய ஆத்மா ஆரோக்யமாக விருக்கிறதோ, அது சரீரத்தில் சம்பந்தப்பட்டிருப்பினும், சம்பந்தப்படாததைப் போலவே காணப்படும். அது யாதொன்றையும் செய்வதில்லை யென்றே தோன்றும். ஆகையினால் மனிதன் தன் சகல கர்மங்களையும் பிரும்மார்ப்பணம் செய்துவிட வேண்டும். பிரும்மாவின் பொருட்டே சகல கார்யங்களையும் செய்து கொண்டு போகவேண்டும். இவ்விதம் செய்வதனால், அவன் கர்மத்தைச் செய்துகொண்டே யிருப்பினும், அதன் பாவ புண்யம் அவனைத் தொடரா. நீரில் வாழும் தாமரையைப் போல அவன் வாழ்க்கை பட்டும் படாமலும் இருந்து வரும்.

செவ்வாய், காலை.

"அதாவது அனுசக்தியை அறிந்தோனாகிய யோகி, மனோ புத்தி காயத்தினால் கார்யத்தைச் செய்து கொண்டேயிருப்பினும், அவன் அவற்றில் பற்றற்று, அகம்பாவமற்று நடந்து கொள்ளுகிறான். சுத்த மடைகிறான். சாந்தி யடைகிறான். யோகமற்றோன் பற்றுதலற்று இருக்கக்கூடாதவனகையால், கைதியைப் போல் தன் இச்சைகளினால் கட்டுப்படுகிறான். இந்த நவ துவாரங்களுடைய தேக வடிவான நகரத்தில் யோகியானவன் எல்லாக் கர்மங்களையும் மனத்தால் துறந்து, எதனையும் செய்வது மின்றி, செய்விப்பது மின்றிச் சுகமாக இருப்பான். நற்காரியம் செய்வோன், பரிசுத்த மடைந்தோன் பாவமும் செய்வதில்லை; புண்யமும் செய்வதில்லை. கர்மத்திலிருந்து பற்றைக் களைந்தோன், அகம்பாவத்தை அழித்தோன், பலன்களைத் துறந்தோன்

நிலை பெற்று நிற்கிறான். அவன் கர்மங்களை அவை செய்யப் படவேண்டியதற்காகவே செய்கிறான். அதாவது தன்னை அக்கார்யங்களைச் செய்ய ஒரு கருவியாக மட்டும் கருதுகிறான். அத்தகையோனைப் பாவ புண்ணியங்கள் எங்ஙனம் தீண்டும்? இதற்கு மாறாக எவன் அக்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கிறானோ, அவன் தினமும் "நான் இவ்வளவு புண்யம் செய்தேன்; இவ்வளவு பாவம் புரிந்தேன்" என்று எண்ணிக் கொண்டே யிருப்பான். அவ்வாறு எண்ணிக் கொண்டே அவன் தினந்தோறும் படுகுழியில் விழுந்து கொண்டே போகிறான். முடிவில் அவன் கணக்கில் பாவங்களே அதிகமாக நிற்கும். ஆனால் எவன் ஞானத்தின் மூலம் தினந்தோறும் தன் அஞ்ஞானத்தை அழித்து வருகிறானோ, அவனுடைய கார்யங்கள் தினந்தோறும் நிர்மலமடைந்து கொண்டே வரும். உலகம் அவன் கார்யங்களில் பரிபூரணத்துவத்தையும், புனிதத் தன்மையையுமே காணும். அத்தகைய மனிதனுடைய சகல கார்யங்களும் சுபாவமாகவே நடைபெறும். அவன் சமதர்சி (சமத்துவ பாவத்துடன் காண்போன்) ஆகிறான். அவனுக்கு வித்தையும் வினயமும் கற்றுப் பிரும்மாவை அறிவோராகிய பிராமணர்களும், பசுவும், யானையும், நாயும், விவேகமற்ற விலங்குகளைக் காட்டிலும் கீழ்ப்பட்ட விதமாக நடந்து கொள்ளும் மனிதனும் சமமே. அதாவது இவையனைத்திற்கும் அவன் ஒரே விதமான ஸேவை செய்வான். ஒன்றைப் பெரிதெனமதித்து அதற்கு மரியாதையும், மற்றொன்றைத் துச்சமாகக் கருதி அதற்கு அவமானத்தையும் செய்யான். பற்றற்றோன் தான் எல்லாருக்கும் கடமைப்பட்டோனாக எண்ணுகிறான்; அனைவரின் கடன்களையும் தீர்த்துப் பூரண நியாயம் காட்டுவான். அவனே உலகை வென்றோன்; பிரும்ம மயமானவன். அவனுக்கு யாரேனுமோர் நன்மை செய்தால், அதன் பொருட்டு அவன் மகிழ்ச்சியுறான். அவனை யாரேனும் திட்டினாலும், அதன் பொருட்டு வருத்தமுறான். பற்றுடையோன் வெளியிலிருந்து தனக்காகச் சுகந் தேடுவான். பற்றற்றோனுக்கு அவன் உள்ளத்திலேயே நிரந்தரமான சாந்தி நிரம்பி யிருக்கிற

படியால், அவன் வெளிச் சுகத்தைத் தேடான். அவன் வெளி வாழ்க்கையை முற்றுந் துறந்தவன். இந்திரியங்களால் ஏற்படும் சுகம் பின்னல் துக்கத்திற்குக் காரணமாகிறது. காமக் குரோதாதிகளால் ஏற்படும் உபத்திரவங்களைச் சகித்துக் கொள்ளுவதே மனிதனுக்கு உசிதமானது. பற்றற்ற யோகி சமஸ்த பிராணிகளின் நன்மையிலேயே சதா ஈடுபட்டிருப்பான். அவன் சந்தேகங்களால் பீடிக்கப் படுவதில்லை. அவனுக்கு வெளி உலக சம்பந்தமே கிடையாது. அவன் பிராணுயாமம் முதலிய பயிற்சிகளினுல் தன்னைக் கட்டுப் படுத்தி, ஆசை, பயம், குரோதம் முதலியவற்றினின்றும் தூர விலகி நிற்கின்ருன். அவன் என்னையே எல்லோருக்கும் மகேஸ்வரன், என்றும் வேள்வியும், தவமும் கொள்வோன் என்றும் அறிந்திருக்கிருன். ஆகவே பரம சாந்தி யடைகிருன்.”

எரவாடா மந்திரம்,<br>8—9—1930.

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## ஆத்மஸம்யம யோகம்—6

செவ்வாய், காலை.

ஸ்ரீ பகவான் கூறுகிருர் :—“கர்மங்களின் பலனைத் துறந்து எவன் தன் கடமையாகிய கர்மத்தைச் செய்கிருனே, அவனைச் சந்யாஸி யென்றும், யோகி என்றும் அழைக்கலாம். எவன் கிரியைகளையே துறந்து விடுகிருனே, அவன் சோம்பேறி. மனம் போன போக்கெல்லாம் காரியம் செய்யாம லிருப்பதே சமத்துவ சாதனைகளை விரும்புவோனுக்குச் சிறந்தது. கர்மம் செய்யாமல் அவன் தொழில்கள் நடைபெறு. சமத்துவத்தை யடைந்தோன் சாந்தி யடைகிருன். அதாவது அவன் நினைத்த மாத்திரத்திலேயே செயல் திறம் அவனுக்குக் கூடி விடுகிறது. எப்பொழுது மனிதன் இந்தி

ரிய விஷயங்களிலும், தன் கர்மங்களிலும் பற்றற்றோனாகி விடுகிறானோ, தன் மனம் நாடும் விஷயங்கள் அனைத்தையும் துறந்து விடுகிறானோ, அப்பொழுது அவனுக்கு யோகம் சித்தித்து விட்டது என்று கூறலாம். அப்பொழுது அவன் யோகாரூடன் என்றழைக்கப் படுகிறான்.

"ஆத்மாவின் உத்தாரம் (ஈடேற்றம்) ஆத்மாவிலேயே ஏற்படுகிறது. ஆனது பற்றியே அது தனக்குத் தானே சத்துரு வென்றும் கூறலாம். எவன் தன் மனதை வென்றுள்ளானோ, அவனுடைய ஆத்மா சீதோஷ்ணம், சுக துக்கம், மான அவமானம் இவைகளில் ஒரே விதமாக இருக்கும். ஞான முடையோன், அனுபவ மடைந்தோன், உறுதி யுள்ளோன், புலன்களைத் தன் வசப்படுத்திக் கொண்டோன், மண், கல், தங்கம் இவைகளை ஒரே விதமாக நோக்குவோன் எவனோ, அவனே யோகி. அத்தகைய யோகி சத்துருவையும், மித்திரனையும், சாதுக்களையும், பாவிகளையும் சமான மானவர்களாகவே பாவிப்பான். இந்த ஸ்திதியை அடைவதற்குச் சித்தத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். விஷய வாசனைகளைத் துறந்து விட வேண்டும். ஏகாந்தத்திலமர்ந்து பரமாத்மாவை தியானிக்க வேண்டும். கேவலம் ஆஸனாதிகளைப் பயிலுதல் மட்டும் போதாது. சமத்துவ பாவத்தை யடைய ஆசைப்படுவோர் பிரும்மசரியம் முதலிய மகா விரதங்களைக் தவறாமல் அனுஷ்டிக்க வேண்டும். இவ்விதம் ஆஸனத்தமர்ந்து, யம நியமங்களைக் கடைப் பிடித்தோனாகித் தன் மனதைப் பரமாத்மாவிடம் ஸ்திரமாகப் பொருத்துவோனுக்குப் பரம சாந்தி யேற்படுகிறது. குண்டோதரனைப் போல் மிதமிஞ்சி உண்போனுக்கும், உபவாச மிருப்பவனுக்கும் இந்த யோக நிலை கிட்டாது. அவ்விதமே அதிகம் தூங்குபவனுக்கும் அதிகம் விழித்திருப்பவனுக்கும் இது கை கூடாது. சமத்துவ பாவத்தை யடைய விரும்புவோன் தன் உணவிலும், தூக்கத்திலும், விழிப்பிலும்—எல்லாவற்றிலும் நியமமாக நடந்து கொள்ளல் வேண்டும். ஒரு நாள் வயிறு வெடிக்க உண்டு மறுநாள் உபவாச மிருப்பதும், ஒரு நாள் நன்றாகத் தூங்கிவிட்டு, மறுநாள் முழுவதும் விழித்தி

ருப்பதும், ஒரு நாள் நன்ருக உழைத்து வேலை செய்துவிட்டு மறுநாளைச் சோம்பலாகக் கழிப்பதும் யோகத்தின் லக்ஷணங்களல்ல. யோகிக்குச் சதா ஸ்திரச் சித்தம் இருத்தல் வேண்டும். ஆசைகளை வென்ருல், அவற்றை அவன் ஸ்வபாவமாகவே துறந்தவனுக இருத்தல் வேண்டும். வாயு குறைவாக உள்ள இடத்தில் வைக்கப்பட்ட தீபமானது எவ்வாறு சலனமற்று, ஸ்திரமாக எரிகிறதோ, அதே போல் உலகம் என்னும் இந்த மாயாவிநோத அரங்கத்தில் நடைபெறும் விளையாட்டுகளும், மனத்தில் சக்கரவட்ட மிட்டுக் கொண்டிருக்கும் விசார அலைகளும் (எண்ணங்களும்) யோகியை இங்கு மங்கும் அலைய விடுவதில்லை; சலன மடைய விடுவதில்லை. இந்த யோகம் மெதுவாக, ஆனல் திடபூர்வமாகப் பிரயத்தனம் செய்வதால் கை கூடும். மனம் சஞ்சலமுள்ளது. ஆகையினுல் அது கண்ட இடமெல்லாம் ஓடும். அதைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்குவது உசிதமானது. மனம் நிலைபெற்று விடின் சாந்தி ஏற்படும். மனதை ஸ்திரப்படுத்துவதற்கு ஆத்ம சிந்தனை செய்தலவசியம். அத்தகைய மனிதன் சகல ஜீவன்களிலும் தன்னைக் காண்கிருன்; உயிர்களனைத்தையும் தன்னிடத்திலும் இப்பிரபஞ்ச முழுவதையும் என்னிடத்திலும் காண்கிருன். அவன் "நான், எனது" என்ற அகங்காரத்தைத் துறந்து விடுகிருன். சதா என்னையே சார்ந்திருக்கிருன். அத்தகைய யோகியால் ஆகாத காரியம் ஒன்று மில்லை."

அர்ஜுனனுக்கு இந்த யோகம் சிரமமானதாகக் காணப்பட்டது. அவன் கேட்கிருன்:—"ஹே! மதுசூதனு! இந்த மனதை நிலைபெறச் செய்வது எங்ஙனம் பிராப்தியாகும்? மனமோ குரங்கிற்குச் சமானமானது. காற்றை அடக்குவது எவ்வளவு அசாத்யமோ அவ்வளவு அசாத்தியமானது மனதை அடக்குவதும். இந்த மனமானது எவ்விதம் எப்பொழுது வசப்படும்? இவற்றையும் சற்று விளக்குவீரா" என்ருன்.

பகவான் பதிலளிக்கிருர்:—"நண்பா! நீ கூறுவது முற்றிலும் உண்மையானதே. ஆனல் விருப்பு வெறுப்புக்களை ஜயித்து, தளராமல் பிரயத்தனம் செய்வதனுல் எத்தகைய

கஷ்டமான காரியங்களும் சுலபமாகி விடுகின்றன. மனதை வெல்லாத பரியந்தம் யோகம் சித்திக்காது என்றுணர். இதில் சந்தேகமே யில்லை."

இதைக் கேட்ட அர்ஜுனன் மீண்டும் கேட்கின்றான்:— "ஹே கிருஷ்ண! ஒருவனிடம் சிரத்தை யிருக்கிறது. ஆனால் அவனுடைய பிரயத்தனங்கள் மந்தமானவை என்று வைத்துக் கொள்வோம். அதன் காரணமாக அவன் பலனடைவதில்லை. அத்தகையோனுக்கு என்ன கதி யேற்படுகிறது? சிதறி யடிக்கப்பட்ட மேக ராசிகளைப்போல அவனுக்கு நாச மேற்படுவதில்லையே?" பகவான் கூறுகிறார்: "பார்த்தா! அவ்விதம் சிரத்தையுடையோர் அழிவதில்லை. சன்மார்க்கத்தில் நடக்கும் எவனுக்கும் அவகதி ஏற்படாது. அத்தகைய மனிதர்கள் தங்கள் கர்மானுசாரம் சிறிது காலம் புண்ய லோகத்தில் வசித்திருந்தபின், மீண்டும் இம் மண்மீது புனிதமான குடும்பங்களிலே ஜனிக்கின்றனர். (ஆனால் இந்த உலகில் அத்தகைய ஜன்மங்கள் கிடைப்பது துர்லபமானது). ஜனன மடைந்தபின் அவர்களுக்குப் பூர்வ ஜன்மத்தில் செய்த நற்கார்யங்களின் நினைவு உதிக்கிறது. அதன் பலனாக இம்முறை அவர்களது பிரயத்தனங்கள் அதிக தீவிரமானவைகளாக இருக்கும். முடிவில் அவர்கள் ஈடேற்ற மடைகிறார்கள். இவ்விதம் பிரயத்தனம் செய்துகொண்டே சிலர் விரைவிலும், சிலர் அநேக ஜன்மங்களுக்குப் பிறகும், தத்தமது சிரத்தை, பிரயத்தனம் இவற்றின் பலத்தை அனுசரித்து சமத்துவமடைகிறார்கள். தவம், ஞானம், கர்ம காண்டத்தின் கிரியைகள், இவ்வனைத்திலும் சமத்துவ நிலை அதிகமானது. ஏனெனில் தவம் முதலியவற்றின் தன்மையும் கடைசியாக சமத்துவமாகவே முடிதல் வேண்டும். ஆகவே நீ சமத்துவ நிலையை அடைந்து யோகி யாவாய். இதிலும் தன்னலந் துறந்து என்னையே ஆராதிப்போனே சிரேஷ்ட னென்றறி."

இந்த அத்தியாயத்தில் ஆசனம், பிராணாயாமம், முதலிய அனுஷ்டானங்கள் புகழப் பட்டுள்ளன. ஆனால் கூடவே பிரும்மச்சரியம்—அதாவது பிரும்மப் பிராப்தியின் பொருட்டு நேம நியமங்களைக் கொள்ளவேண்டியதன் அவசியத்தைப்

பற்றியும் பகவான் கூறி யிருப்பதைக் குறிப்பிட வேண்டியதே. ஆஸனாதி கிரியைகளினால் சமத்துவ பாவம் ஏற்படுவதில்லை. ஆனால் ஆஸனங்கள், பிராணாயாமம் முதலிய அப்பியாசங்கள் மனதை ஸ்திரப்படுத்துவதற்கு ஒரு சிறிது உதவி புரிகின்றன. அதுவும் அந்த உத்தேசத்துடன் அவை செய்யப்பட்டால் தான். அல்லது அவற்றை ஒருவிதமான தேகப் பயிற்சி யென்று கருதி, ஏனைய சரீரப் பயிற்சிகளுடன் சேர்க்க வேண்டியதே. தேகாப்யாசம் என்ற இனத்தில் பிராணாயாமாதிகள் மிக்க உபயோகமுள்ளவையே. மேலும் தேகாப்யாசங்களில் சாத்வீகமானது இது ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். சரீரப் பயிற்சி யென்ற நோக்குடன் இவை அப்யசிக்கத் தக்கவையே யானாலும், பலர் இவற்றின் மூலம் சித்தி யடையவும், பிரகாசத்தைக் காண்பதற்காகவும் செய்கின்றனர். அவ்விதம் செய்வதால் லாபத்திற்கு பதிலாக ஹானியே ஏற்படும். இந்த அத்யாயம் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது அத்யாயங்களின் அநுபந்தமாகக் கருதப்படுவது நல்லது. முயற்சி யுடையோருக்குத் தேறுதலளித்து, "நாம் பலமுறை தவறிவிடினும் சமத்துவத்தை யடையும் முயற்சியைக் கைவிடலாகா" தென்று இது போதிக்கிறது.

எரவாடா மந்திரம்
16—12—30

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## ஞான விக்ஞான யோகம்—7

செவ்வாய், காலை.

பகவான் சொல்லுகிறார்:—"ஹே ராஜன்! என்னிடத்தில் மனதைச் செலுத்தி, என்னையே சரணமடைந்து, கர்மயோக மென்னும் ஆசாரத்தைக் கடைப்பிடித்தோன், நிச்சயமாக-சம்பூரணமாக என்னை எவ்விதம் அறிகிறான் என்று கூறுகிறேன் கேள். இதை யறிந்த பின் இனி அறிய வேண்டியவை பாக்கியிராது. ஆயிரத்திற் கொருவரே இதை யடைய

முயலுகிறார்கள். அவ்விதம் முயற்சி செய்பவர்களிலும் வெகு சிலரே பலனடைகின்றனர். பூமி, ஜலம், ஆகாசம், நெருப்பு, வாயு மனம், புத்தி, அகம்பாவம் என்ற எட்டு விதமாக எனது இயற்கை யுள்ளது. இதை எனது சாமான்ய இயற்கை என்று கூறப்படுகிறது. ஜீவரூபமாக வுள்ளது எனது மற்றொரு இயற்கை. இந்த இரண்டு இயற்கையினு லேயே அதாவது தேகமும் உயிரும் சம்பந்தப்பட்டே இவ்வுல கம் ஆக்கப்பட்டுள்ளது. ஆகவே எல்லா உயிர்களின் உற்பத் திக்கும், அழிவிற்கும் காரணம் நான். கயிற்றில் மணிகள் கோக்கப்பட்டிருப்பதே போல் இந்த உலகம் பூராவும் என்னால் கோக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஜலத்தின் சுவை நான்; சூரிய சந்திரர்களில் பிரகாசிக்கும் ஒளி நான்; வேதங் களின் ஓங்காரமும் நானே. ஆகாசத்தின் சப்தம் நான்; புருஷர்களின் வீரமும் நானே. மண்ணின் சுகந்தம் நான்; அக்நியின் ஒளி நான்; பிராணிகளின் உயிரும் நானே. தவசிகளின் தவம் நான்; அறிவாளிகளின் புத்தி நான்; பல வான்களின் சுத்த பலமும் நானே. உயிர்களிடத்தில் நிறைந் துள்ள தர்ம நெறிக்கு மாறுபாடில்லாத கர்மமும் நானே. சுருக்கமாகக் கூறுமிடத்து சத்வ, ராஜஸ, தாமஸ குணங்களி னால் உற்பத்தியாகக்கூடிய உணர்ச்சிகளனைத்தும் என்னிடமே ஜனித்தவை என்றுணர். மேலும் இவை யனைத்தும் என் ஆதாரத்தின் பேரிலேயே நிற்பவை. இந்த மூன்றுவித குணங்களில் பற்றுடையோன் என்னுடைய நாசமற்ற தன் மையை அறிந்து கொள்ளுகிறதில்லை. எனது மூன்று குணங் களாகிய தேவமாயை கடத்தற்கரியது. ஆனால் என்னைச் சரணடைந்தோன் இந்த மாயையை-அதாவது மூன்றுவித குணங்களைக் கடக்கிறான். ஆசார விசாரமற்ற மூடன் என் சரணங்களை அடைவதில்லை. அவனோ மாயையில் உழன்று கொண்டு, அந்தகாரத்திலேயே திரிந்துகொண்டு இருக்கிறான். அவன் ஞானமு மடைகிறதில்லை. ஆனால் நல்ல ஆசார சீலன் என்னைத் தொழுகிறான். என்னை வணங்குவோரில் சிலர் தங்கள் துயரை நீக்கிககொள்ளும் பொருட்டும், சிலர் என்னை அறிவதன் பொருட்டும் தொழுகின்றனர். என்னைத்

3495

தொழுவ தென்பதற்கு என்ருல் சிருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்குத் தொண்டாற்றுவது என்று பொருள். இவ்விதம் தொண்டாற்றுபவர்களிலும் சிலர் துக்கத்தால் பீடிக்கப்பட்டு, அதை நிவர்த்தி செய்து கொள்ளுவதற் கென்றும், வேறு சிலர் ஒரு குறிப்பிட்ட லாபத்தைக் கருதியும், பின்னும் சிலர் "ஏதோ செய்வோம்; என்னதான் ஏற்படுகிறதோ பார்ப்போம்" என்ற மனப்பான்மை யோடும் சேவை செய்கின்றனர். மற்றும் சிலர் தமது ஞானத்தின் காரணமாக என்னைத் தொழாதிருக்க முடியாதவர்களாகி சேவை செய்து வருகின்றனர். முடிவில் கூறியபடி சேவை செய்வோரே எனது ஞானிகளான பக்தர்களாகின்றனர். இவர்களே எனக்கு எல்லோரைக் காட்டிலும் அதிக பிரியமானவர்கள். அல்லது இவர்களே என்னை மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமாக அறிந்தவர்கள் என்றும் கூறலாம். இவர்கள் எனக்கு வெகு அருகிலேயே இருக்கின்றனர். இத்தகைய பதவி யடைவதற்கான ஞானம் மனிதனுக்கு அநேக ஜன்மங்களுக்குப் பிறகே ஏற்படுகிறது. இந்த ஞானமேற்பட்டபின் அவர்கள் இந்த உலகத்தில் வாசுதேவனை என்னைத் தவிர வேறு ஒன்றையும் காண்பதில்லை. ஆனல் ஆசையுடையோர் பல விதமான தேவதைகளை வணங்குகின்றனர். எவர் யாரை வணங்கினலும் சரி, அவரவர் பக்திக்குத் தக்கபடி பலனளிப்போன் நானே யாகின்றேன். இவ்விதம் குறைந்த அறிவுடையோர் அதற்குத் தக்கபடி குறைந்த பலனையே யடைகின்றனர். அவ்வளவிலேயே சந்தோஷமும் அடைகிருர்கள். அவர்கள் தங்கள் அற்ப (குறைந்த) புத்தியின் காரணமாகத் தாங்கள் தங்கள் இந்திரியங்களின் மூலமாகவே என்னைக் காணமுடியும் என்று கருதுகிருர்கள். மூடர்கள்! நாசமற்ற-உவமையற்ற எனது ஸ்வரூபம் இந்திரியங்களுக்குப் புறம்பானது; கை கால், கண், மூக்கு, செவி முதலியவற்றின் மூலம் அறிதற்கரியது என்று அவர்கள் அறியார். இவ்விதம் சகல வஸ்துக்களையும் உற்பத்தி செய்தவனுக நான் இருப்பினும் அக்ஞானிகள் என்னை அறிந்து கொள்ளுவதில்லை. ஆனல் நீ எனது இந்த யோக மாயையை அறிந்துகொள்.

"விருப்பு வெறுப்பின் காரணமாக, சுகதுக்கங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இதன் பலனாக இந்த வையகம் மூர்ச்சை யடைந்து, மாயையிலேயே உழலுகிறது. ஆனால் இவற்றிலிருந்து விடுபட்டோர்—நிர்மலமான ஆசார விசாரங்களுடையோர் தமது விரதங்களில் அசைவற்று நின்று நிரந்தரமாக என்னையே பூஜிப்பார்கள். அவர்களே எனது பூரண பிரும்மரூபத்தைச் சகல பிராணிகளிடத்தும், வித விதமாகப் பொலிவுறும் உயிர்களிலும் நிறைந்துள்ள என்னையும், என் கர்மங்களையும் அறிகிறார்கள். இவ்விதம் எவன் என்னைப் பஞ்ச பூதங்களிலும் மேலோன், தேவர்களில் சிரேஷ்டன், யக்ஞங்களில் முதல்வன் என்றறிந்து, அதன் பயனாகச் சம நிலையடைகிறானோ, அவனே மரணத்திற்குப் பிறகு ஜனன மரண பந்தத்திலிருந்து விடுபடுகிறான். ஏனெனில் இவ்வளவு அறிந்தபின் அவன் மனமானது இங்குமங்கும் அலையாது. அவன் இந்த ஜகமனைத்தையும் ஈஸ்வரனிடம் கண்டு, ஈஸ்வரனிலேயே ஒன்றாகக் கலந்து விடுவான்."

ஏரவாடா மந்திரம்
23—12—1930

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## அக்ஷரபல யோகம்—8

செவ்வாய், காலை.

அர்ஜுனன் கேட்கிறான்:—"பூரண பிரும்மம், அத்யாத்ம ஞானம், கர்மம், அதிபூத ஞானம், அதிதேவ ஞானம், அதியக்ஞ ஞானம் என்று பல பெயர்களைக் கூறினீர். ஆனால் அவற்றின் பொருள் எனக்கு விளங்கவில்லை. மேலும் உமது அதிபூதாதி ரூபங்களை அறிந்தோன் சமத்துவமடைந்து, மரணத்தருவாயில் உம்மைக் காண்பார்கள் என்றும் கூறினீர். இவை எங்ஙனம் என்று எனக்கு விளக்குவீராக."

பகவான் பதில் சொல்லுகிறார்:—"ஸர்வோத்தமமான-நாசமற்ற ரூபமே பூரண பிரும்மம் எனப்படுவது. பிராணி

களின் கர்த்தா, அவர்களைத் தாங்குவோன் என்ற ரூபத்தில் தேகம் எடுத்தோன் அத்யாத்மா. உயிர்த் தன்மையை விளை விக்கும் கிரியை கர்மமெனப்படும். அதாவது எந்தக் கிரியை களால் உற்பத்தி மாத்திரம் ஏற்படுகிறதோ அஃது கர்மம். அழிவு படும் எனது தேக ஸ்வரூபத்தைக் காட்டுவது அதி பூத ஞானம். யக்ஞங்களின் மூலம் சுத்த மடைந்துள்ள ஆத்ம ஸ்வரூபமே அதியக்ஞ மெனப்படுகிறது. இவ்விதம் தேக ரூபத்திலும், மூர்ச்சித்துள்ள ஜீவ ரூபத்திலும், சுத்த ஜீவ ரூபத்திலும், பூரண பிரும்ம ரூபத்திலும் தோன்றும் சர்வ ரூபங்களிலும் நானே யிருக்கின்றேன். இவ்விதம் அனைத்திலுமுள்ள என்னை எவன் மரிக்கும் தருவாயில் தியா னிக்கிறானோ, தன்னை மறந்து விடுகிறானோ, எவ்வித சிந்த னையோ ஆசையோ அடையாதிருக்கிறானோ, அவன் அவசியம் உயிர் விடுமுன் என்னைக் காண்கிறான். மனிதன் எந்த ரூபத்தை தினந்தோறும் தியானித்து வருகிறானோ, அதே ரூபத்தை இறுதிக் காலத்திலும் தியானம் செய்வானானால், அவன் அந்த ஸ்வரூபத்தையே அடைகிறான். ஆகையினால் நீ தினமும் என்னையே ஸ்மரணை செய்து கொண்டிரு. என் னிடத்திலேயே உன் புத்தியையும், மனதையும் நிலைநிறுத்து. அப்பொழுது முடிவில் என்னையே அடைவாய். ஆனால் "மனது (சித்தம்) ஸ்திர மடைவதில்லையே" என்று கேட்கலாம். அது வாஸ்தவந்தான். ஆனால் தினந்தோறும் பயிற்சி செய்வதனாலும், முயற்சி செய்வதனாலும் ஸ்திர சித் தம் ஏற்படுவது உறுதி. ஏனெனில், சற்று முன்புதானே தேக மெடுத்தோரும் எனது ஸ்வரூபமானவர்களே என்று கூறினேன். ஆகையால் மனிதன் தன் மரண காலத்தில் ஸ்திரமாக இருப்பதற்காகவும், பக்தியில் லயித்திருப்பதற்காக வும், எங்கும் நிறைந்தவனும், பழையோனும், சூக்ஷ்மமாக விருப்பினும் எல்லோரையும் காப்பாற்றும் சக்தி வாய்ந்தவ னும், எவ்வளவு தூரம் யோசித்துப் பார்த்தாலும் விரைவில் காணக்கூடாதவனும், அந்தகாரத்தையும், அக்ஞானத்தையும் சூரியனைப் போல அழிப்போனுமான பரமாத்வாவை ஸ்மரணை செய்துகொண்டு உயிர் விடுவதற்கு முன்ன

தாகவே தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்—தயார் செய்து கொள்ள வேண்டும்.

"இந்த பரமபதத்தை வேதங்கள் "அக்ஷர பிரும்மா" என்று கூறுகின்றன. விருப்பு வெறுப்பற்ற முனி இதை யடைகிறான். இந்தப் பதத்தை (நிலையை) அடைய விரும்புவோர் பூரண பிரும்மசரிய விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். அதாவது மனோ, வாக்கு, காயத்தைத் தம் வசப்படுத்திக் கொள்ளுகின்றனர். விஷயங்களைத் தியாகம் செய்து விடுகின்றனர். இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, என்னையே சிந்தித்துக்கொண்டு, எந்த ஸ்திரீ புருஷர்கள் தமது உயிரை விடுகிறார்களோ, அவர்கள் பரமபதத்தையே அடைகிறார்கள். அவர்கள் துக்கத்திற்கு ஆஸ்பதமான ஜனனத்தை மீண்டும் எடுக்க மாட்டார்கள். ஆகவே ஜனன-மரண சுழலிலிருந்து விடுபடுவதற்கு என்னை அடைவதே தகுந்த உபாயமாகும்.

"மனிதன் தன் நூறு வருஷ ஆயுளில் வெகு நேரத்தை வீணாக்குகிறான்; ஆயிரக் கணக்கான ஜாலங்களைச் செய்கிறான். ஆனால் காலமோ முடிவற்றது. ஆயிரக் கணக்கான யுகங்கள் பிரும்மாவுக்கு ஒரு தினமாகிறது. இத்துடன் ஒப்பிடும் பொழுது மனிதனுடைய ஒரு நாளோ, அல்லது நூறு வருஷமோ எம்மாத்திரம்? இவ்வளவு அற்ப காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டு, வீணாக முறை யிடுவானேன்? முடிவற்ற காலச் சக்கிரத்தில் மனிதனுடைய ஜீவிய காலம் கேவலம் க்ஷண மாத்திரமானதே. ஆகவே இந்த அற்ப காலத்தை ஈசுவர தியானத்தில் செலவிடுவதே மனிதனுக்குப் பெருமை யளிக்கத் தக்கதாகும். அதற்கு மாறாக, க்ஷண நேரங் கூட நிலைத்திருக்காத போகங்களில் மனிதன் உழலுவானேன்? பிரும்மாவின் இரவிலும் பகலிலும் உற்பத்தியும் அழிவும் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கின்றன; இனியும் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கும்.

"உற்பத்தியில் லயித்திருக்கும் பிரும்மாவும் என் ஸ்வரூபமானவரே; அவ்யக்த மானவரே. இவரை இந்திரியங்கள் மூலம் அறிய முடியாது. இவரைக் காட்டிலும் மேலான

தோர் அவ்யக்த தோற்றம் (ஸ்வரூபம்) எனக்குளது. அதன் அடையாளத்தில் ஒரு பகுதியை உனக்குக் காட்டினேன். அந்த ஸ்வரூபத்தை யடைந்தோர் ஜனன-மரணங்களிலிருந்து விடுபடுகின்றனர். ஏனெனில் அந்த ஸ்வரூபத்திற்கு இரவு, பகல் முதலிய இரட்டைகள் கிடையாது. அஃது சாந்தமான, அசைவற்ற ஸ்வரூபம். இந்த ஸ்வரூபத்தை அளவற்ற பக்தியின் மூலமாகவே அடைய முடியும். அதன் ஆதாரத்தின் பேரிலேயே சர்வ ஜகமும் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வரூபம் எங்கும் நிறைந்திருக்கிறது.

“இனி உத்தராயண சுக்லபக்ஷ தினத்தில் மரிப்பவர்கள் நான் முற்கூறியபடி என்னை ஸ்மரணை செய்து கொண்டே உயிர் விட்டுப் பின் என்னையே அடைகின்றார்கள் என்றும், தக்ஷிணாயன கிருஷ்ண பக்ஷ இரவில் மரிப்போர் மீண்டும் புனர்ஜன்மம் எடுக்கிறார்கள் என்றும் கருதப்படுவதன் அர்த்தம் என்னவென்று ஆராய்வோம்:—

உத்தராயணம் = சுக்லபக்ஷம் = நிஷ்காம சேவா மார்க்கம்.

தக்ஷிணாயணம் = சுயநல மார்க்கம்.

அதாவது சேவாமார்க்கத்தால் முக்தியும், ஸ்வார்த்த மார்க்கத்தால் பந்தனமும் ஏற்படுகிறது என்றறிக.

“ஸேவா மார்க்கம் ஞானமார்க்கமாகும்; ஸ்வார்த்த (தன்னல) மார்க்கம் அஞ்ஞான மார்க்கமாகும். ஞானமார்க்கத்தில் செல்லுவோர் மோக்ஷத்தையும், அக்ஞான மார்க்கத்தில் செல்லுவோர் பந்தனத்தையும் அடைகிறார்கள் என்றும் பொருள் கொள்ளுக. இவ்விரண்டு மார்க்கங்களின் தாரதம்யத்தை அறிந்த பின்பும், மோகத்தில் மூழ்கி, அக்ஞான மார்க்கத்தை யாரே விரும்புவார்கள்? இவ்வளவு தெரிந்து கொண்ட பின் மனிதன் சகலவிதமான புண்ணிய பாவங்களின் பலன்களைத் துறந்துவிட்டு, பற்றற்றோனாகி, கடமையிலேயே நிலைபெற்று, என்னாலாக்கப்பட்ட உத்தம ஸ்தானத்தை அடைய முயற்சித்தலே பொருத்தமானது.”

எரவாடா மந்திரம்,
26—12—1930.

பாபுவின் ஆசீர்வாதம்.

# ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்—9

திங்கள், காலை.

முன் அத்யாயத்தின் முடிவு ஸ்லோகத்திலே பகவான் யோகியின் நிலையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார் என்றாலும் பக்தியின் மகிமையைப் பற்றிக் கூறவேண்டியது பாக்கியாகவே இருக்கிறது. ஏனெனில் கீதையில் வருணிக்கப்பட்ட யோகி ஶுஷ்க ஞானியுமல்ல, பிரும்மச்சாரியான பக்தனுமல்ல. ஆனால் கீதையில் கூறப்பட்ட ஞானியோ ஞானத்தாலும், பக்தியாலும் பற்றற்ற தொண்டு புரியும் யோகியாவான். ஆகவே பகவான் சொல்லுகிறார்:—"நீயோ தோஷமற்றவன் ; ஆகையினால் பரம ரகஸியமான ஞானத்தை உனக்குப் போதிக்கிறேன். அதைப் பெற்றுக்கொண்டு நீ மங்களமடைவாயாக. இந்த ஞானம் எல்லா ஞானத்திலும் உயர்ந்தது, புனிதமானது, இலகுவில் இதைப் பின்பற்றி நடக்கலாம். இதில் நம்பிக்கையும் சிரத்தையும் இல்லாதோர் என்னை அடையமுடியாது. மனிதர்களும், பிராணிகளும் தங்கள் இந்திரியங்கள் மூலம் என் ஸ்வரூபத்தை அறியமுடியாது. என்றாலும் அவை இந்த ஜகமனைத்தும் வியாபித்திருக்கின்றன. எனது ஆதாரத்தின் பேரிலேயே அவை ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. எனக்கு அவை ஆதாரமல்ல. பிராணிகளின் உற்பத்திக்குக் காரணஸ்தனாகவும், போஷக கர்த்தாவாகவும் நான் இருப்பினும், இப்பிராணிகள் என்னிடம் இல்லை ; நான் அவர்களிடமில்லை என்றும் சொல்லலாம். எப்படி யென்றால் அவைகள் அக்ஞானத்தில் மூழ்கி, என்னை அறிந்து கொள்ளுவதில்லை. அவைகளிடம் பக்தி கிடையாது. இதை என்னுடைய மாயை என்றுணர். நான் பிராணிகளிடத்தில் இல்லை என்றாலும், காற்றைப் போல எங்கும் வியாபித்திருக்கிறேன். பார்த்தா! இன்னும் கேள். யுக முடிவில் எல்லா உயிர்களும் என்னிடம் லயமாகின்றன ; மறு யுக ஆரம்பத்தில் மீண்டும் ஜனிக்கின்றன. இவ்விதம் உயிர்கள் அழிவதற்கும் ஜனிப்பதற்கும் கர்த்தாவாக இருப்பவன் நானே. எனினும் இது

என்னைத் தளைப்படுத்துவதாக வில்லை. ஏனெனில் இத் தொழில்களில் எனக்குப் பற்றென்பதே சிறிதுமில்லை. இவ் வுயிர்களின் விஷயத்தைப்பற்றி எனக்குக் கவலையே கிடை யாது. ஆனாலும் இக்கர்மங்கள் நடைபெற்றுக் கொண்டே யிருக்கின்றன. இஃது எனது இயற்கை; எனது ஸ்வபாவம். ஆனால் என்னுடைய இந்த ரூபத்தை மனிதர் அறிந்து கொள்ளுவதில்லை. ஆகவே நாஸ்திகர்களாகவே இருக்கிறார் கள். என்னை மறுக்கிறார்கள். என்னைப் பற்றி பலவிதமாகப் பேசி நகைக்கிறார்கள். அத்தகையோர் வீணாசைப் படு கிறார்கள்; அவர்களுடைய கார்யங்களும் பயனற்றவைக ளாகவும் உதாவாக்கரையானவைகளாகவும் ஆகின்றன; அவர்கள் பூரண அக்ஞானத்தில் மூழ்கியிருப்பார்கள். ஆகவே அவர்கள் அசுர (ராக்ஷஸ) இயற்கையுடையோர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் தெய்வீக இயற்கையுடைய மகாத்மாக்கள் என்னை நாசமற்றவன், சகல ஜீவராசிகளின் ஆதிகாரணமானவன் என்று தெளிந்து, என்னை வழிபடு கின்றனர். அவர்கள் திடமான நிச்சயமுடையவர்கள். தினந் தோறும் விடா முயற்சியுடன் என்னைப் பூஜிக்கின்றனர்; என்னையே தியானிக்கின்றனர். மேலும் சிலர் நான் அத் வைத ஸ்வரூபி (ஒரே ரூபமுள்ளவன்) என்றும் வேறு சிலர் பல ரூப முடையோன் என்றும் கருதுகிறார்கள். எனது குணங்கள் அளவற்றன. ஆனதுபற்றியே என்னைப் பல ரூப முடையோனாகக் கருதுவோர் விதவிதமான என் குணங்களை விதவிதமான ரூபங்களாகக் காணுகின்றனர். எனினும் இவர் கள் அனைவரையும் என் பக்தர்களாகவே கருத வேண்டும்.

"இன்னும் கேள். யக்ஞங்களைச் செய்வதற்காக மேற் கொள்ளும் சங்கற்பம் (உறுதி) நான்; யக்ஞமும் நானே, முன்னோர்களின் ஆதாரம் நான்; யக்ஞங்களுக்குத் தேவை யான காய் கனி வகைகளும் நான்; மந்திரம் நான், ஆகுதி யும் நானே. ஹோமத்தில் போடப்படும் திரவியம் நான், அக்னியும் நானே. இவ்வுலகத்தின் பிதா நான்; மாதா நான்; இவ்வுலகத்தைத் தாங்குபவன் நான்; பிதாமகன் (பாட்டன்) நான்; அறியத் தகுந்தவனும் நானே. ஓங்கார மந்திரம் நான்;

ருக் வேதம், சாம வேதம், யஜுர் வேதம் இம் மூன்றும் நானே. உலகத்தின் கதி நான்; போஷகனும் நானே. இறைவன் (பிரபு) நான்; சாக்ஷியும் நானே, புகலிடம் நான்; நன்மை செய்வோனும் நானே. ஆக்குதலும் அழித்தலும் நான்; குளிரும் வெப்பமும் நான்; உலகத்திலுள்ள அசத்தும் நானே.

"வேதங்களில் வர்ணிக்கப்பட்ட கிரியைகளைச் செய்வோர் குறிப்பிட்ட பலனைப் பெறவே அவ்வாறு செய்கின்றனர். ஆனது பற்றியே அவர்கள் ஸ்வர்க்கத்தையே அடைந்தாலும், ஜனன மரணச் சுழல் மட்டும் அவர்களை விடுவதில்லை. ஆனால் ஒரே பாவனையுடன் என்னையே சிந்தித்து வழி படுவோரின் சுமையை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அவர்களின் தேவையை நான் பூர்த்தி செய்கிறேன். நானே அவர்களைப் படைத்துக் காக்கிறேன். வேறு சிலர் இதர தேவதைகளிடம் சிரத்தை வைத்துப் பூஜித்து வருகின்றனர். அவர்களிடம் அஞ்ஞானம் சூழ்ந்திருக்கிறது என்றாலும், முடிவில் அவர்களும் என்னையே பூஜிப்பவர்களாகக் கருதப்படுகின்றனர். ஏனெனில் யக்ஞங்களின் எஜமானன் நான் ஒருவனே. ஆனால் எங்கும் நிறைந்தவன் நான் என்பதை அறியாது இருப்போர், முடிவில் சொன்ன ஸ்திதியை அடைய மாட்டார்கள். மேலும் தேவதைகளைப் பூஜிப்பவர்கள் தேவலோகத்தையும், பிதுருக்களைப் பூஜிப்பவர்கள் பித்ரு லோகத்தையும், பூதப் பிரேதாதிகளைப் பூஜிப்போர் அவற்றின் லோகத்தையும் அடைவார்கள். ஞான பூர்வமாக என்னையே வழிபடுவோர் என்னையே அடைவார்கள். பக்தி பூர்வமாக என்மீது இலையைத் தூவி எவன் அர்ச்சிக்கிறானோ, அவனது முயற்சியுடன் செய்யப்படும் பக்தியை நான் அங்கீகரித்துக் கொள்ளுகிறேன். ஆகையினால் நீ எதைச் செய்தாலும் எனக்கு அர்ப்பணம் செய்து விட்டே அதைச் செய். இதனால் பலாபலன்களின் பொறுப்பாளியாகமாட்டாய். நீ பலன்களை மட்டும் இச்சிக்காது துறந்து விடுவாயானால், ஜனன-மரணத்திலிருந்து விடுபடுவாய். எனது உள்ளத்தில் எல்லா ஜீவராசிகளும் சமமானவர்களே. ஒருவன் அல்லது ஒன்றின்மீது பிரியமும் மற்றொருவன் அல்லது மற்

றென்றின் மீது பிரியமின்மையும் கிடையாது. ஆனால் பக்தி பூர்வாக என்னைப் பூஜிப்பவனிடம் நான் இருக்கிறேன். இதில் பக்ஷபாதமில்லை. அவன் தன் பக்தியின் பலனை அடைகிறான். இந்த பக்தியின் மகிமையை என்னவென்று வர்ணிப்பேன்! என்னை ஒருமனப்பட்டு பூஜிப்போன் துராச்சாரமுள்ளவனாக இருந்திருப்பினும், விரைவில் சாதுவாக மாறிவிடுகிறான். சூரியனுக்கு முன் இருள் நிலையற்று—இருந்த இடந் தெரியாது அழிந்து விடுவதே போல், என்னை அடைந்த வளவில் மனிதனுடைய துராச்சாரங்கள் நாசமடைந்து விடுகின்றன. ஆனது பற்றியே என்னைப் பக்தியுடன் பூஜிப்பவர்கள் ஒருக்காலும் அழிவதில்லை என்று உறுதியாக நம்பு. அவர்கள் தர்மாத்மாவாகவும் பரம சாந்தியை அனுபவிப்போராகவும் மாறுகின்றனர். இன்னும் பக்தியின் மகிமையைப் பற்றிக் கூறுகிறேன் கேள், பாவ யோனியில் (குலத்தில்?) பிறந்தோர் என்று கருதப்படுபவர்களும், கல்வியற்ற ஸ்திரீகளும், வைசியர்களும், சூத்திரர்களும் இவர்கள் யாவரும் என்னைச் சரண் என்று அடைவார்களானால், அவர்களும் என்னையே அடைகிறார்கள். அப்படி யிருக்கப் புண்ணிய கர்மங்களைச் செய்வோரெனக் கருதப்படும் பிராமண, க்ஷத்திரியர்களைப் பற்றிக் கூறுவானேன்? உண்மையாக பக்தி செய்வோர் எவ ராயினும், அவர்களுக்கு அப்பக்தியின் பலன் கிட்டுகிறது. ஆகையினால் சாரமற்ற-அநித்யமான உலகில் ஜனித்துள்ள நீ, என்னைப் பஜனை செய்து அதன் மூலம் இந்த உலக வாழ்க்கையிலிருந்து விடுபடுவாயாக. உனது மனதை என்மீது திருப்பு. என் பக்தனாகவே இரு. உனது யக்ஞங்களையும் (சேவை) என் பொருட்டே செய்து வா. என்னையே நமஸ்கரித்து வா. இவ்விதம் நீ என்னையே பாராயணம் செய்து கொண்டு, உன் ஆத்மாவை என்னில் ஹோமம் செய்து (பிணைத்து) சூன்யவானாக ஆவாய் அப்பொழுது நீ என்னையே அடைவதுறுதி.”

செவ்வாய், காலை.

(குறிப்பு) இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டியது யாதெனில், பக்தி யென்பதற்கு ஈசுவரன் மீது நாம்

கொள்ளும் பற்று என்றே அர்த்தம். பற்றின்மையைப் பழக விரும்புவோருக்கு இவ்விதம் தங்கள் பற்றையெல்லாம் ஈசுவரனிடம் செலுத்தும் இம்முறை சுலபத்திலும் சுலபமானது; கடைத்தேறத் தகுந்த உபாயமானது. ஆகவே இவ்வத்யாயத்தின் ஆரம்பத்தில் பக்தியை ராஜயோகமென்றும் சுலப மார்க்கமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த பக்தி நமது ஹிருதயத்தில் தோன்றி நிலைகொள்ளுமானால், சுலபமானதாகிறது. ஹிருதயத்தில் நிலைகொள்ளாதவரை தான் கஷ்டமாகத் தோன்றும். பக்தி மார்க்கத்தை அடையாமல் புறம்பே நின்று காண்போர் புழுங்கித் தவிக்கிறார்கள். இதனுள் இறங்கினோர் மகா சுகத்தை அனுபவிக்கிறார்கள். சுதன்வா என்னும் மகான் கொதிக்கும் எண்ணெயில் போடப்பட்ட பொழுது சிரித்தாராம். ஆனால் அதைக் கண்கூடாகக் கண்டு கொண்டு, வெளியே நின்றுகொண்டிருந்த ஜனங்கள் நடுங்கிக் கொண்டிருந்தனராம். நந்தனரைப் புனிதமாக்குவதற்கு அக்னிப் பரீக்ஷை நடந்தபொழுது, அவர் அக்னியின்மீது ஆனந்தத் தாண்டவமாடியதாகக் கூறப்படுகிறது. இவ்விருவரின் வாழ்க்கையில் இத்தகைய சக்தி ஏற்பட்டிருந்ததா என்று இங்கு சர்ச்சை செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் யாராயினும் ஏதேனும் ஒரே வஸ்துவினிடத்தில் தம்மையே மெய்மறந்து லயித்துப் போவார்களானால், அவர்களுக்கும் இந்த ஸ்திதியே ஏற்படுகிறது. ஏனெனில் அவர்கள் தங்களைத் தாங்களே மறந்து விடுகின்றனர். ஆனால் அவ்வாறு ஒரு வஸ்துவின் பேரிலேயே லயித்துப் போவோர், சர்வேஸ்வரனைத் தவிர வேறு யார்பேரில் லயிக்க விரும்புவர்? சர்க்கரையையும், கரும்பையும் விடுத்துக் கசப்பான வேம்பை விரும்பி யுண்பாருமுண்டோ? சூரிய, சந்திரனை விரும்பாது மின்மினியை விரும்புவாறுமுண்டோ? ("ஆரமுதுண்ணுதற் காசைப் பட்டார், கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ? விண்ணில் இரவிதனை விட்டு விட்டெவரும் போய் மின்மினி கொள்வாரோ?" என்ற பாரதியாரின் கவியை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்க).

இவ்விதம் இந்த ஒன்பதாவது அத்யாயம் போதிக்கிறது.

பிரபு விடத்தில் பற்றுக் கொள்ளாவிடில்-பக்தி யடையாவிடில், ஏனைய பொருள்களிடத்து நமக்குப் பற்றின்மை ஏற்படுவது அசம்பவ மானதேயாம். இவ்வத்தியாயத்தின் கடைசி ஸ்லோகமே இதன் சாராம்சமாகும். அதன் பொருளை எமது சொந்த வாக்கியத்தில் கூறவேண்டுமாயின், "நீ என்னிடத்திலேயே இரண்டறக் கலந்துவிடு" என்பதாகும்.

எரவாடா மந்திரம்
26—12—1930 பாபுவின் ஆசீர்வாதம்.

---

## விபூதி யோகம்—10

செவ்வாய், காலை.

பகவான் சொல்லுகிறார் :—"மீண்டு மோர் முறை பக்தர்களின் நன்மைக்காகக் கூறுகிறேன் கேள் :—தேவர்களும், மகரிஷிகளுங் கூட என் பிறப்பைக் கண்டதில்லை. ஏனெனில், உற்பத்தியாவதற்கு எனக்கு அவசியமே யில்லை. அவர்களும், மற்றுமுள்ள சகல ஜீவராசிகளும் உற்பத்தியாவதற்கு நானே காரணம். என்னைப் பிறப்பற்றோன் என்றும், ஆதி முதல்வன் என்றும் அறிந்துள்ள ஞானிகள் சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டுத் தூய்மை யடைகின்றனர். ஏனெனில் பரமேசுவரனைப் பிறப்பற்றவன், ஆதி முதல்வன் என்று தெளிந்த பின், தங்களை அப் பரம பிதாவின் பிரஜைகள், அல்லது அவருடைய அம்சங்கள் என்று தெரிந்து கொண்ட பின், மனிதர்களுக்குப் பாவ இயற்கையே இருப்பதில்லை. பாவ இயற்கைக்கு மூலமாக இருப்பது, தன் சம்பந்தமாக ஏற்படும் அஞ்ஞானமே யாகும்.

"பிராணிகள் எங்ஙனம் என்னிடமிருந்து உற்பத்தியாகின்றனவோ, அதே போல் அவற்றினிடம் காணப்படும் வித விதமான மனோபாவங்களான பொறுமை, சத்தியம், சுக-துக்கம், ஜனன-மரணம், பயம்-பயமின்மை முதலியவை

களும் என்னிட மிருந்தே உற்பத்தியாகின்றன. இவ்விதம் சகல ஜீவன்களிடத்திலும் நிறைந்துள்ள எனது வல்லமையையும், மகிமையையும் அறிந்து கொண்டோனுக்குச் சமத்துவ பாவம் எளிதில் ஏற்படுகிறது. ஏனெனில் அவன் அகம் பாவத்தைத் துறந்து விடுகிறான். அவனுடைய சித்தம் என்னிடமே பதிந்திருக்கும். அவன், தனது அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்து விடுகிறான். அத்தகையோர் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ளும் பொழுதும் என்னைப் பற்றியே பேசிக் கொள்ளுவார்கள்; என்னைப் புகழ்ந்து பாடிக்கொண்டு சந்தோஷமாகவும், ஆனந்தமாகவும் இருப்பார்கள். இவ்விதம் உள்ளன்புடன் என்னை நினைத்துப் பஜனை செய்வோருக்கு—என்னையே சதா மனதில் எண்ணிக் கொண்டிருப்போருக்கு—நான் ஞானத்தை அளிக்கிறேன். அதன் மூலம் அவர்கள் என்னையே அடைவார்கள்."

இவ்வனைத்தும் கேட்டு வந்த அர்ஜுனன் மெய் மறந்து ஸ்துதி செய்யத் தொடங்கினான்:—"பகவானே! பரப்ரம்மம் நீ; பரமபதமும் நீயே. புனிதன் நீ; ரிஷிகள் நின்னைத் தேவனென்றும், பிறப்பற்றோன் என்றும் தொழுகின்றனர். நீயும் அங்ஙனமே உரைக்கின்றாய். ஹே சுவாமி! ஹே பிதா! உனது சொரூபத்தை யாரும் அறியார். நீயே உன்னை அறிவாய். ஹே பகவான்! நினது வடிவங்கள் அனைத்தையும்—சக்தி சொரூபங்கள் அனைத்தையும் எனக்கு உரைப்பாய். மேலும் உன்னையே சிந்தித்துக்கொண்டு எவ்விதமாக உன்னை அடைய முடியும் என்றும் தயவு செய்து தெரிவிப்பீராக" என்று வினயமாகக் கேட்டுக் கொண்டான்.

பகவான் பதில் கூறினார்:—"ஹே பார்த்தா! எனது வடிவங்கள் கணக்கற்றவை. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் உனக்குரைக்கிறேன் கேள். எல்லாப் பிராணிகளின் ஹிருதயங்களிலும் வசிக்கும் ஆத்மா நான்; உயிரனைத்திற்கும் ஆதி, மத்தியம், முடிவு இம்மூன்றும் நானே. ஆதித்யர்களில் விஷ்ணு நான்; வான மண்டலத்திலுள்ள ஜோதிகளில் பிரகாசம் பொருந்திய சூரியன் நான்; வாயு தேவதை

களில் மரீசி நான்; நக்ஷத்திரங்களில் (கிரஹங்களில்) சந்திரன் நான். வேதங்களில் சாம வேதம் நான். தேவர்களில் இந்திரன் நான். இந்திரியங்களில் மனம் நான். உயிர்களில் உணர்வு நான். ருத்திரர்களில் சங்கரன் நான். யக்ஷ-ராக்ஷஸர்களில் குபேரன் நான். அசுரர்களில் பிரஹ்லாதன் நான். விலங்குகளில் சிங்கம் நான். பக்ஷிகளில் கருடன் நான். முடிவாகக் கூறுமிடத்து இவ்வுலகில் என் ஆணையின்றி ஒன்றும் நடவாது. நல்லதும், கெட்டதும் நிகழ்வது என்னால். என்னுடைய ஆணையின்றி அணுவும் அசையாது. ஆதலால், மனிதன் அகம்பாவத்தைத் துறந்து, தீங்கான மார்க்கங்களை நீக்கி விட வேண்டும். ஏனெனில் நல்லது, கெட்டது ஆகிய இவ்விரண்டிற்குமுள்ள பலனைக் கொடுப்போன் நானே. இப் பிரபஞ்ச மனைத்துமே எனது சக்தி வடிவங்களில் ஒரு அம்சமாக நிருவப்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்.

எரவாடா மந்திரம்,<br>17—1—1931.

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## விசுவரூப தர்சன யோகம்—11

திங்கள், காலை.

அர்ஜுனன் வேண்டிக் கொள்ளுகிறான்:—"ஹே பகவான்! ஆத்மாவைப் பற்றி நீர் உரைத்தவற்றைக் கேட்டு என் மனதிலிருந்த மோகம் விலகிப்போயிற்று. நீயே எல்லாம்; நீயே பிராணிகளின் உற்பத்திக்குக் கர்த்தா, நீயே அவற்றின் அழிவுக்கும் கர்த்தா, நீயே அழிவற்றோன் என்று தெளிவாக அறிந்து கொண்டேன். இனி கூடுமானால், அந்த தெய்வத் தன்மை பொருந்திய சொரூபத்தை எனக்குக் காட்டியருள்வீராக."

பகவான் சொல்லுகிறார்:—"எனது சொரூபம் பல்லாயிரக் கணக்கானவை, பல வர்ணங்களுள்ளவை, அவற்றுள் ஆதித்யர், வஸுக்கள், ருத்திரர்கள் முதலானோர் அனைவரும் கூடியிருக்கின்றனர். என்னிடத்தில் இவ்வையமனைத்தும், அதனுள் வசிக்கும் சராசரங்கள் அனைத்தும் நிறைந்துள்ளன. இந்த விசுவரூபத்தை நீ உனது மனிதக் கண்களால் காண முடியாது. ஆகவே உனக்கு நான் திவ்ய (தெய்வீகக்) கண்ணைக் கொடுக்கிறேன். அதன் மூலம் என் விசுவரூபத்தைப் பார்"

ஸஞ்சயன் திருதராஷ்டிரனிடம் கூறுகிறான்:—"ஹே ராஜன்! இவ்விதம் கூறிப் பகவான் அர்ஜுனனுக்குக் காட்டிய அற்புத ரூபத்தைப் பற்றி வர்ணிப்பது கூடாதகாரியமாகும். நாம் தினமும் ஒரு சூரியனையே காண்கிறோம். ஆனால் ஆயிரக்கணக்கான சூரியர்கள் ஒரே சமயத்தில் ஒளி பரப்பினால் எத்தகைய பிரகாசம் ஏற்படுமோ, அதைவிடப் பலமடங்கு அதிகமான பிரகாசம் பொருந்தியதாக விருந்தது அந்த சொரூபம். அந்த வடிவத்தின் மேலிருந்த நகைகளும் ஆயுதங்களும் அதிக அழகாயிருந்தன. அந்த விசுவரூபத்தைத் தரிசித்த அர்ஜுனனின் தலை சுழன்றது. அவன் மெய்சிலிர்த்துப் பின்வருமாறு போற்றலானான்:—"

"ஹே தேவனே! நினது இந்த விசாலமான தேகத்தில் நான் எல்லா பிராணிகளையும் காண்கின்றேன். இதில் பிரும்மா இருக்கிறார். மஹாதேவர் இருக்கிறார். ரிஷிகள் இருக்கிறார்கள். ஸர்ப்பங்களும் இருக்கின்றன. நினது கைகள், முகங்கள் கணக்கற்றவை. அவற்றை எண்ண முடியாது. ஸ்வரூபத்திற்கு ஆதியுமில்லை, மத்யமும் இல்லை, முடிவும் காணேன். நினது வடிவம் ஓர் ஒளியின் குன்று. பார்க்கக் கண்கள் கூசுகின்றன. நினது வடிவை அக்னியைப் போல் ஜ்வலிப்புடனும், உஷ்ணத்துடனும் காண்கின்றேன். நீயே ஜகத்தின் ஆதாரம். நீயே பழையோன். நீயே தர்மத்தைக் காப்போன். எந்தப் பக்கம் பார்த்தாலும் நினது வடிவமே காணப்படுகிறது. சூரிய சந்திரர்கள் நினது கண்களைப் போல் காணுகின்றனர்.

பூமி, ஆகாசம் ஆகிய இவ்விரண்டிலும் நீயே வியாபித்திருக்கிறாய். நினது ஒளி இந்த உலக மனைத்தையும் எரிக்கிறது. உலகமே நடுங்குகிறது. தேவர்களும், ரிஷிகளும், சித்தர்களும், கை கூப்பிக்கொண்டு, நடுக்கத்துடன் உன்னையே துதி செய்து கொண்டிருக்கின்றனர். இந்த விராட ரூபத்தையும், இதன் ஒளியையும் கண்டு நான் வியாகூல மடைந்துள்ளேன். ஹே பகவான்! என் மனதில் சாந்தியும் தைரியமும் இல்லாதொழிந்தன. ஹே பகவான்! உனது முகம் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. தீபத்தில் விட்டில் பூச்சிகள் போய் விழுவதே போல், நினது வாயினுள், அண்டங்களனைத்தும் விழுவதைக் காண்கின்றேன். நீ இவர்களைப் பொடிப் பொடியாக்கி வருவதையும் காண்கின்றேன். இந்த உக்ர ரூபம் கொண்ட நீ யார்? நினது இயற்கையை என்னால் அறிந்துகொள்ளக் கூடவில்லையே."

இதைக் கேட்ட பகவான் மீண்டும் கூறுகிறார்:—"பார்த்தா! உலகத்தை சம்ஹரிக்கும் காலன் நான். நீ சண்டை போட்டாலும் சரி, போடா விட்டாலும் சரியே. ஆனால் இங்கு கூடியுள்ள வீரர்கள் அழிந்து போவது உறுதி. சண்டையில் இவர்களில் ஒருவனாவது தப்பப்போவதில்லை. நானே இவர்களை அழிக்கிறேன். அவ்விதம் அழிவதற்கு நீ ஒரு கருவியே."

இதைக் கேட்ட அர்ஜுனன் சொல்லுகிறான்:—ஹே தேவனே! ஹே ஜகந் நிவாசனே! நீயே பரம்பொருள். சத்தும் நீ. அசத்தும் நீயே. இவற்றைக் கடந்தோனும் நீயே. நீ ஆதி தேவன், பழையோன். இவ்வுலகத்தின் முடிவான நிலையம் நீ. நீயே அறியத் தகுந்தவன். வாயு, யமன், அக்னி, பிரஜாபதி முதலிய யாவரும் நீயே. உனக்கு ஆயிரம் நமஸ்காரம். நீ தயவு செய்து நினது பழைய உருவத்தையே ஏற்றுக்கொள்வாயாக."

இதைக் கேட்ட பகவான் "அர்ஜுனா! உன்னிடத்தில் சந்தோஷ மடைந்து, உனக்கு என் விசுவ ரூபத்தைக் காட்டினேன். வேதாப்யாசத்தினாலும், யக்ஞத்தாலும், இதர சாஸ்திரங்களை அப்பியாசம் செய்வதனாலும், தானம் கொடுப்பதா

லும், தவம் செய்வதனுலும் கூட நீ இப்பொழுது தரிசித்த வடிவத்தைக் காண முடியாது. ஆனல் இன்று நீ அதனை தரிசித்தனை. பயங்கரமான இவ்வுருவத்தைக் கண்டு நீ பயப் படாதே. இதோ என் பழைய வடிவத்தைப் பார்.'' "நீ கண்ட எனது விசுவ ரூப தரிசனம் தேவர்களுக்கும் துர்லப மானது. இஃது சுத்த பக்தியினுல் மட்டும் கிடைக்க வல் லது. தன் சகல கர்மங்களையும் எனக்கு அர்ப்பணம் செய் தோனும், என்னையே சதா வழிபடுவோனும் எனது பக்த னுகிருன். அவன் தனது பற்றைத் துறந்து விடுகிருன். சகல பிராணிகளிடத்தும் நட்புப் பாராட்டுகிருன். அத்தகை யோனே என்னை அடைகிருன்'' என்ருர்.

குறிப்பு: பத்தாம் அத்தியாயத்தைப் போலவே இந்த அத்தியாயத்தையும் நான் வேண்டுமென்றே சுருக்கி யிருக்கி றேன். இந்த அத்தியாயம் காவ்யரசம் நிறைந்தது. ஆகவே மூல ரூபத்திலோ, அல்லது மொழி பெயர்ப்பு ரூபத்திலோ இதைப் பன்முறைப் படிப்பது மேலானது. அப்படி அடிக் கடி இதைப் படிப்பதனுல் பக்தி ரஸ மேற்படக்கூடும். பக்தி ரஸம் ஏற்பட்டதா இல்லையா என்றறிவதற்கு இந்த அத்தி யாயத்திலுள்ள கடைசி ஸ்லோகமே அறிகுறியாகும். சர்வார்ப் பணம் செய்யாத வரையில்—சர்வ ஜீவன்களிடத்திலும் நட் புக்கொள்ளாத வரையில், பக்தி ஏற்படுவது சாத்தியமில்லை. ஈஸ்வரனுடைய கால ரூபத்தைத் த்யானிப்பதனுலும், அவ ருடைய வாயில் உலகத்தில் ஜனித்த உயிர்கள் அனைத்தும் விழுந்து மடிய வேண்டியவையே என்ற உண்மையை அறிந்து கொள்ளுவதனுலும், க்ஷணந்தோறும் கால ரூபத்துடன் பக வான் உலகத்தை சம்ஹரித்து வருகிருர் என்று தெரிந்து கொள்ளுவதனுலும், சர்வார்ப்பணம் செய்தலும், சகல ஜீவன் களிடத்திலும் நட்புக் கொள்ளுதலும் சுலபமாகிறது. இஷ் டத்தின் பேரிலேயோ, இச்சை யில்லாமலோ நாம் இந்த கால ரூபத்தின் வாயில் போய் சேரவேண்டியவர்களே. எப் பொழுது அந்த முடிவு ஏற்படும் என்று கூறமுடியாது. அங் ஙனம் வாழ்க்கை அனித்தியமா யிருக்கையில் சிறியோன்— பெரியோன், உயர்ந்தோன்—தாழ்ந்தோன், ஸ்திரீ—புருஷ

னென்று மனிதனுக்கு மனிதன் காட்டும் பேதங்கள் தோன்ற லாகுமா? எல்லோரும் காலேஸ்வரனுக்கு ஒரே கவளம் தான். இதை யறிந்து நாம் தீனர்களாகவும், எளியவர்களாக வும் ஏன் ஆகக்கூடாது? எல்லோரிடத்திலும் சமத்துவ மான நட்பை ஏன் அடையக் கூடாது? இவ்விதம் நட்பைச் செலுத்துவோருக்கும் தம்மை அற்பமாகக் கருதுவோருக் கும் இந்த கால மூர்த்தி பயங்கரமாகத் தோன்றமாட்டார்.

எரவாடா மந்திரம்
19—1—1931

பாபுவின் ஆசீர்வாதம்

---

## பக்தி யோகம்—12

இன்று பன்னிரண்டாம் அத்தியாயத்தின் சாராம் சத்தை எழுத விரும்புகிறேன். இந்த அத்தியாயத்திற்கு "பக்தி யோகம்" என்று பெயர். விவாக காலத்தில் பஞ்ச யக்ஞங்களில் ஒன்றாகிய இதை, மணமகன் மனப்பாடம் செய்ய வேண்டும். தினமும் மனனம் செய்ய வேண்டும்' என்று கூறுவது வழக்கம். பக்தியின்றேல் ஞானமும், கர்மமும் சூன்யமாகும்; ரசமற்றதாகும்; முட்டுக் கட்டை யாகவும் தோன்றும். ஆகவே பக்தியுடன் கீதையைப் பற் றிய இந்த ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

அர்ஜுனன் பகவானைக் கேட்கிறான்:—"உனது வடி வத்தைப் பூஜிப்போன், வடிவமற்றதை பூஜிப்போன், இவ்விரு பக்தர்களில் அதிகச் சிறந்தவன் எவன்?" இக் கேள்விக்குப் பதில் அளிக்கையில் பகவான் கூறுகிறார்:—"எவன் எனது உருவத்தைச் சிரத்தையுடன் வழிபடுகின்றானோ, அதி லேயே இரண்டறக் கலந்து விடுகின்றானோ, அந்த சிரத்தை யுடையோன் என் பக்தனாவான். ஆனால், எவன் உருவ மற்ற தத்துவத்தை வழிபடுகிறானோ, அந்த உபாசனையின் பொருட்டுத் தன் புலன்களைத் தன் வசப்படுத்திக்கொண்டு,

சகல ஜீவராசிகளிடத்திலும் சமத்துவமாக நடந்து கொள்ளுகிறனே—அதாவது எவரையும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று மதிக்காதிருக்கின்றனே, அவனும் என்னையே அடைகின்றான். ஆகையால் இவ்விருவரில் எவன் சிரேஷ்டன் என்று கூற முடியாது. ஆனால் தேக மெடுத்தோரால் ரூபமற்ற தத்துவத்தைப் பின்பற்றிச் சம்பூரண பக்தி செலுத்துதல் கூடாத காரியமென்று கருதப்படுகிறது. தெளிவற்ற-ரூபமற்ற வஸ்து குணமு மற்றது. ஆகவே மனிதனுடைய கற்பனை சக்திக்குப் புறம்பானது. ஆதலால் தேக மெடுத்தோர் யாவரும் அறிந்தோ, அறியாமலோ உருவமுள்ள வஸ்துக்கே பக்தர்களாகின்றனர். ஆனது பற்றியே நீயும் எனது ரூபத்திலேயே உன் மனதைச் செலுத்து! உன தனைத்தையும் அதற்கே அற்பணம் செய்! இவ்வாறு உன்னால் செய்யக் கூடாவிட்டால் உன் மனதில் தோன்றும் விகாரங்களையாவது தடுக்கப் பழகு. அதாவது யம நியமங்களை மேற்கொண்டு, பிராணயாமம், ஆசனாதிகளின் உதவியால் மனதை உன் வசப்படுத்திக் கொள்! இதுவும் உன்னால் முடியவில்லை என்றால் நீ செய்வதனைத்தையும் என் பொருட்டே செய்யப் பழகு. அப்பொழுது உன் உள்ளத்தில் தோன்றும் மோகமும், மமதையும் அழிவுறும். கூடவே நீயும் பரிசுத்தவானவாய். மேலும் உனக்குப் பக்திரஸம் மேலிடும். இதுவும் உன்னால் கூடாதென்றால் கர்மங்களின் பலனையாவது துறக்கப் பழகு. அதாவது பலன்களின் பேரில் ஆசை வைக்காதே. உனக் கேற்பட்ட கடமையை மட்டும் செய்து வா. மனிதன் பலன்களின் எஜமானாக முடியாது. பலன்கள் கை கூடுவதற்கு அநேக அங்கங்கள்-காரணங்கள் ஒன்று சேர வேண்டும். அப்பொழுதுதான் அவை தோன்றும். ஆகவே நீ அவற்றைப் பற்றிக் கவலை கொள்ளாது, கர்மங்களை முடிப்பதற்கு ஒரு கருவியாக மட்டும் உன்னை ஆக்கிக் கொள்.

"நான் மேலே கூறிய நான்கு முறைகளில் எதையும் உயர்ந்ததென்றோ, தாழ்ந்ததென்றோ கருதாதே. இவற்றில் எது உனக்குப் பிடித்தமாகத் தோன்றுகிறதோ-சாத்திய

மானதென்று தெரிகிறதோ அதைக் கடைப்பிடித்து, அதன் மூலம் பக்திரசத்தை ருசி பார். ஆனால் யம நியமாதிகள், பிராணாயாமம், ஆசனாதிகள் முதலிய யோகாப்யாசங்களின் மூலம் பக்தி செய்வதை விட, கேட்டல், தியானித்தல் முதலியவைகள் அடங்கிய ஞான மார்க்கம் சுலபமென்றும், அதைக் காட்டிலும் ஒரு உருவத்தை வைத்துக்கொண்டு உபாசனை செய்யும் த்யான மார்க்கம் சுலபமென்றும், அதைக் காட்டிலும் கர்மங்களின் பலனைத் துறந்து விடுதல் இன்னும் சுலபமானதென்றும் தோன்றுகிறது. சாமான்யமாக எல்லோருக்கும் ஒரே முறை லகுவாக இருக்க முடியாது. சிலருக்கு எல்லா முறைகளையும் மேற் கொள்ளவேண்டி யிருக்கும். இந்த நான்கு முறைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை. ஆகவே பார்த்தா! எப்படியேனும், எவ்வாறேனும் நீ உன்னை எனது பக்தனாக்கிக் கொள். எந்த மார்க்கத்தில் பக்தி சித்திக்கிறதோ, அந்த மார்க்கத்திலேயே நிலை கொள்.

“இனி பக்தன் என்போன் யாவன் என்று கூறுகிறேன் கேள். பக்தன் எவரிடமும் த்வேஷம் கொள்ளான்; எவரிடத்திலும் பகைமை கொள்ளான். சகல ஜீவன்களிடத்திலும் நட்புக் கொள்வான்; அவற்றின்பால் கருணை பாராட்டுவான். அதன் பொருட்டுத் தன் மமதையைத் துறந்து, அகத்தை வெட்டிப் புதைத்து விடுவான். சுக துக்கங்களைச் சமமாகப் பாவிப்பான். குற்றம் செய்தோரைப் பொறுப்பான். ஏனெனில், அவனே தன் குற்றங்களுக்காக உலகத்தவரின் மன்னிப்பை நாடுவோனாகின்றான் அல்லவா? அவன் சதா சந்தோஷமாகவே இருப்பான். தன் மனதில் ஏற்படுத்திக் கொண்ட நல்ல நிச்சயங்களிலிருந்து எப்பொழுதும் மாறான். மனம், புத்தி சகிதமாகத் தனது எல்லாவற்றையும் என்பால் அர்ப்பணம் செய்திடுவான். அவனிடத்தில் உலகத்திற்கு வெறுப்பும் பயமு மில்லை; அவனும் உலகத்தவரை வெறுப்பதில்லை. அவர்களைக் கண்டு பயப்படுவது மில்லை. எவன் என் பக்தனோ, அவன் சந்தோஷம், சோகம், பயம் முதலியவற்றினின்றும் விடுபட்டவன். அவனுக்கு யாதொருவித இச்சையும் இருக்காது. அவனே

புனிதன், க்ஷேமமடைந்தோன். இன்னும் கேள்! என் பக்தன் திட மனமுடையோன். நல்லது, கெட்டதென்ற இரண்டையும் துறந்தோன். (அதாவது அவற்றின் பேரில் கவலையற்றோன்). அத்தகையோனுக்கு மித்திரனேது, சத்துருவேது? மானமேது, அவமானமேது? அவன் நித்ய மௌனியாகக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்து, சதா சந்துஷ்டனாக இருப்பான். எப்பொழுதும் ஸ்திரமாக இருப்பான். ஆகவே பாண்டவா! இந்தப் பிரகாரம் எவன் சிரத்தையுடையோனாக இருக்கிறானோ அவனே என் பிரிய பக்தனாகிறான்" என்று கூறி முடித்தார் பகவான்.

எரவாடா மந்திரம்,
4—11—1930.

பாபுவின் ஆசீர்வாதம்.

---

## க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்—13

திங்கள், காலை.

பகவான் கூறுகிறார்:—"இந்தச் சரீரத்திற்கு வேறு பெயர் க்ஷேத்ரம். இதை அறிந்தோன் க்ஷேத்ரக்ஞன். சகல சரீரங்களிலும் வசிக்கும் என்னை க்ஷேத்ரம் என்றறி. க்ஷேத்ரத்திற்கும் க்ஷேத்ரக்ஞனுக்குமுள்ள பேதத்தை அறிதலே உண்மையான ஞானமாகும். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்ச மகா பூதங்கள், அகங்காரம், புத்தி, பிருகிருதி, பத்து இந்திரியங்கள், [ஐந்து கர்மமேந்திரியங்கள்; ஐந்து ஞானேந்திரியங்கள்] மனம், ஐந்து விஷயங்கள், இச்சை, த்வேஷம், சுகம், துக்கம், சங்காதம், சேதன சக்தி, சரீரத்திலுள்ள பரமாணுக்கள் ஒன்றையொன்று தழுவி நிற்கும் குணம் இவ்வாறான பல சக்திகள் 'சேர்ந்து, விகாரமான க்ஷேத்திரம் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த சரீரத்தையும், அதன் விராகத் தன்மையையும் நீ அறிந்து கொள். அபிமானமில்லாமை, டம்பமில்லாமை அஹிம்சை, பொறுமை, நேர்மை இவற்றை அடைதல் குருசேவை செய்தல், பரிசுத்தமாயும் உறுதியாயுமிருத்தல், புலன்களை அடக்குதல், விஷயங்

களின்பால் வைராக்ய மடைதல், அஹங்காரமின்மை, ஜனனம், மரணம், வயோதிகம், வியாதி, துக்கம், இதர தோஷங்களின் தன்மையைப்பற்றி அறிதல், பிள்ளை-குட்டி, வீடு-வாசல், இஷ்டமித்திர பந்துக்கள்பால் மோகமின்மை, தான் என்னும் மமதையைத் துறத்தல், தனக்குப் பிரியமான விஷயமானாலும் சரி, பிரியமில்லாத விஷயமானாலும் சரி, அவ்விரண்டிலும் சமபாவமாக இருத்தல், ஈஸ்வரனிடத்தில் இடைவிடாத பக்தி செலுத்துதல், ஏகாந்த வாசம் ஜனக் கூட்டத்தில் கலந்துவாழ விரும்பாமை, ஆத்மா சம்பந்தமான ஞானத்தையடைய வேட்கை யடைதல், முடிவாக ஆத்ம தர்சனம் அடைதல் முதலியனவாம். இவை யனைத்தும் ஞானமெனப் படுகிறது. இவற்றிற்கு விபரீதமான தன்மை கள் அக்ஞானமாகும். இந்த ஞானத்தை அடைந்தபின் எது அறியப்படுகிறதோ, அவ்வாறு எதை அறிவதனால் மோக்ஷம் சித்திக்கிறதோ, அதைப் பற்றிக் கொஞ்சம் உரைப்பேன் கேள்:— அதுதான் ஆதியில்லாத-அழிவற்ற பரப்பிரமம். அது ஆதியற்றது. ஏனெனில் அதற்குப் பிறப்பேயில்லை. உலகத்தில் ஒன்றுமே தோன்றாத காலத்திலும்—என் உலக மே தோன்றாத காலத்திலும் அந்தப் பரப்பிரும்மம் இருந்தது. அது சத்துமல்ல, அசத்துமல்ல. (சத் = இருப்பது; அசத் —இல்லாதது) அது இவ்வெல்லாவற்றையும் கடந்தது. ஆனால் ஒரு விதத்தில் அதை சத் என்றும் கூறலாம். ஏனெனில் அது நித்தியமானது. ஆனால் அதன் நித்தியத்தைக் கூட மனிதன் அறிந்து கொள்ளுகிறதில்லை. இக்காரணம் பற்றியே பரப்பிரும்மத்தை "சத்" என்பதையும் கடந்தது என்று கூறலாம். பரப்பிரும்மம் எங்கும் நிறைந்து, எல்லாவற்றை யும் தாங்கிக் கொண்டிருப்பினும், அது குணமற்றது. குணம் என்பதற்கு மனோ விகாரம் என்று பொருள். அர்ஜுனா! இவ்விதம் பரப்பிரும்மம் இயங்கிக் கொண்டு மிருக்கிறார், ஸ்திரமாகவும் நிற்கிறார். அவர் சூக்ஷ்மமானவர்; ஆகவே காணக்கூடாதவர். அவர் தூரத்திலும் இருக்கிறார். பக்கத் திலு மிருக்கிறார். பெயரும், வடிவமுமற்றவர். எனினும் அவர் எங்கும் இருக்கிறார். அவர் எங்குமில்லாதவர். பிரா

ணிகள் அனைத்தினுள்ளும் வீற்றிருப்பவராதலால், எங்கு முள்ளவரும் அவரே. அவரே சிருஷ்டிக்கிறார், ரக்ஷிக்கிறார்; முடிவில் அவரே அனைத்தையும் அழிக்கிறார். அவரே ஜோதிகளின் ஜோதி. இருள் மயமான அந்தகாரத்தைக் கடந்தவர். ஞானத்தின் எல்லை. ஆகவே இவ்வனைத்திலும் வசிக்கும் பரப்பிரும்மமே அறியத் தகுந்தவர். அவரே க்ஞேயர். ஞானத்தை மக்கள் அடைய நாடுவதும், என்னுடைய தன்மையை அடைவதற்காகவே.

ஈசனும், அவரது மாயைகளும் அனாதி காலந்தொட்டே இருந்து வருபன. மாயையிலிருந்து விகாரம் ஜனிக்கிறது. விகாரத்திலிருந்து அநேக விதமான கர்மங்கள் தோன்றுகின்றன. மாயையின் காரணமாக வாழ்க்கையானது சுக-துக்கம், பாவ புண்ணியங்களை அனுபவிக்க வேண்டியதாகிறது. இந்த சூக்ஷ்மத்தை யறிந்து, யார் விலகிநின்று, தமது கடமைகளை ஒழுங்காகச் செய்து வருகிறார்களோ, அவர்கள் கடமையாகிய கர்மத்தைச் செய்து கொண்டே இருப்பினும், இறந்தபின் மறு ஜன்மம் அடைய மாட்டார்கள். ஏனெனில், இந்த ரகசியத்தை யறிந்தோர் எங்கும் கடவுளையே காண்கின்றனர். "அவன் ஆணையின்றி அணுவும் அசையாது" என்று தெளிந்து, அவர்கள் அகம்பாவத்தைத் துறந்து விடுகிறார்கள். தங்களைத் தங்கள் சரீரத்திலிருந்து தனியாகப் பிரித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் எங்கும் நிறைந்திருந்தும் ஆகாசமானது யாதொரு பாரமுமின்றி—பற்றுதலும் இன்றி காணப்படுகிறதைப் போல், சரீரத்தில் வசித்திருப்பினும் தங்களை ஞானத்தின் மூலம் அதில் ஒட்டாமல் செய்து கொள்ள வேண்டுமென்று அறிந்து கொள்ளுகிறார்கள்.

எரவாடா மந்திரம்
26—1—31

பாபுவின் ஆசீர்வாதம்.

Printed by M. R. Seshan,
at the Lunar Printing Press, Triplicane, Madras.

# மகாத்மா காந்தி எழுதிய நூல்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இல்லறமும் பிரும்மசரியமும் .... | 0 | 6 | 0 |
| மகா தியாகம் (மகாத்மாவின் உபவாஸ சரித்திரம்) .... | 0 | 4 | 0 |
| அனாசக்தி யோகம் (பகவத்கீதையின் மொழி பெயர்ப்பு. மகாத்மாவின் வியாக்யானம்) .... | 0 | 4 | 0 |
| ஹிந்து தர்மம் .... | 0 | 2 | 0 |
| கீதா போதனை (சிறையினின்று எழுதியது) .... | 0 | 2 | 0 |
| உத்தம வாழ்க்கை ” .... | 0 | 2 | 0 |
| ஆரோக்கிய வழி .... | 0 | 4 | 0 |
| நீதி தர்மம் .... | 0 | 2 | 0 |
| சத்திய சோதனை முதற் பாகம் ... | 1 | 8 | 0 |
| சத்திய சோதனை இரண்டாம் பாகம் .... | 2 | 0 | 0 |

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

| | | | |
|---|---|---|---|
| ஹரிஜன சேவை .... | 0 | 0 | 6 |
| ஹரிஜன ஊழியம் .... | 0 | 0 | 6 |
| ஹரிஜனத் தொண்டு .... | 0 | 0 | 6 |
| ஹரிஜனப் பணி .... | 0 | 0 | 6 |
| ஹரிஜன விமோசனம் .... | 0 | 0 | 6 |

சுதந்திரச் சங்கு புத்தகசாலை,

பைக்கிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.